# சாளரம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையோர் திங்கள் இதழ் [illegible] 1992 விலை 12 ரூபா

## தெறிப்பு

ஜன் ~ இதழின் அட்டைப்படமும் அதற்கான கவிதையும் அழகாக, மனதைத் தொடுவதாக அமைந்திருந்தன. சாளரம் மென்மேலும் புதிய மெருகுடன் வெளிவர வேண்டுமென எதிர்பார்க்கிறேன்.

நி. வசந்தகுமார்,
தாவடி.

□□

சாளரம் தமிழீழமெங்கும் கிளை விட்டுக் கொண்டே செல்வதோடு பல தெரியாத விடயங்களையும் தெரியப் படுத்துகின்றது. சாளரத்தின் பணிகள் தொடர எனது வாழ்த்துக்கள்!

ஞா. பரதன்,
நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

□□

மாணவர்களின் அறிவுப் பசியைத் தீர்க்கும் ஒரு மாத இதழாக சாளரம் விளங்குகின்றது. சாளரத்தில் வெளிவரும் அனைத்து ஆக்கங்களும் மாணவரின் முன்னேற்றத்துக்கு வழிகாட்டியாக அமைகின்றன. சாளரம் இதழ் எவ்வித தடைகளும் இன்றித் தொடர்ந்தும் வெளிவர என் உளம் கனிந்த நல்வாசிகள்.

ஜெ. கோகுலன்,
யாழ். இந்துக் கல்லூரி.

□□

அன்பான சாளரமே,

உன் பணி தமிழீழ மாணவர்களுக்கு அறிவைப் புகட்டுகிறது. தமிழீழத்தில் மாணவர்களுக்கு அறிவைப் புகட்டும் நூல் என்றால் சாளரம்தான். சாளரம் இன்னும் பல விடயங்களை வெளியிட எனது வாழ்த்துக்கள்!

இப்படிக்கு,
ஞா. கௌரி,
யா/வல்வை, மகளிர் ம. வி.

அரும்புகள்
பகலவன் பதில்கள்
அடுத்த இதழில்...

## உள்ளே...


☐ தகவல் குவியல்

☐ போர்க் கருவிகள் படைத்த ஆக்கிமீடிசு

☐ வாத்தியார் வீட்டு விறாந்தை

☐ ஏவுகணைகள்

☐ விஞ்ஞானி என்பவன் யார்?

☐ 'இன்னொரு காடு இன்னொரு போர்'

☐ புத்தகத்தின் மூலையில் ஒரு சிறு குறிப்பு

☐ கேள்வி ஒன்று! விடை பத்து!

☐ 'எயிட்ஸ்' நோயிலிருந்து தப்ப வள்ளுவன் வகுத்த மருந்து

☐ நன்னூல் புகட்டும் அறிவுரை

☐ விடுதலை வீராங்கனை ஜோன் ஆப் ஆர்க்

☐ எங்கள் மண்; எங்கள் எழுத்தாளர். - எங்கள் நூல்கள்!

☐ சந்தர்ப்பத்தை கைதவற விட்ட பிரேமதாசா!

☐ தனியார் கல்வி நிறுவனங்கள்

☐ கண்ணில் தெரியும் கதைகள்

☐ ஆசிரியர் தலையங்கம்.



'சாளரம்'
வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் குவியல்

## அமெரிக்காவில் இப்படியா...?

அமெரிக்காவில் ஒவ்வொரு ஐந்து நிமிடங்களுக்கும் ஒரு அங்கவீனமுள்ள குழந்தை பிறக்கிறது. ஏறத்தாழ ஐந்து லட்சம் குழந்தைகளுக்கு கீழ்வாதசுரம் (Rheumatic Fever) பிடித்துள்ளது

21 வயதுக்குட்பட்ட 10 மில்லியன் சிறுவர் சிறுமியருக்குச் சரியான கண்பார்வை கிடையாது. 20 லட்சம் பேருக்கு சரியாக காது கேட்கவில்லை 17,000 பேர் முழுச் செவிடு.

நூறில் மூன்று பேருக்கு இருதய நோயும், மனோநிலையிழந்த நிலையும் இருக்கிறது ஏறத்தாழ 75 சதவிகிதத்தினருக்கு பல சம்பந்தமான பல்வேறு வியாதிகள் உண்டு. இவ்வாறு பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

உலக சுகாதார நிறுவனம் (WHO) அண்மையில் இத்திடுக்கிடும் புள்ளி விபரத்தை வெளியிட்டுள்ளது.

உலகில் மிக முன்னேற்றமடைந்த அமெரிக்காவிலேயே இவ்வாறான குறைபாடுகள் அதிகரித்துக் காணப்படுகிறது என்ற செய்தி வியப்பானதாக இருக்கிறதல்லவா.

## பதவியால் போன கவிதை...?

பிரபல ஆங்கிலக் கவிஞர் வொர்ட்ஸ்வேர்த் என்பவர் ஏழு ஆண்டு காலம் அரசவைக் கவிஞராகப் பதவி வகித்துவந்தார். அந்த ஏழு ஆண்டு காலத்தில் அவர் ஒரு கவிதைகூட எழுதவில்லை.

## கரப்பான்பூச்சி

இப்போதுள்ள உயிரினங்களில் மிகவும் பழமையானது கரப்பான் பூச்சிதான். இது 10 கோடி வருடங்களுக்கு முன்பே தோன்றி இன்னமும் உருவ அமைப்பு மாறாமல் இருந்துவருகின்றது என்கிறார்கள் உயிரியல் நிபுணர்கள்.

## மண்ணுக்குள் மலர்

மண்ணுக்குள் விளையும் 'தாவரங்களின் கிழங்கு வகைகளை நாம் கண்டிருக்கிறோம். பயன்படுத்துகின்றோம். மண்ணுக்குள் மலரும் பூக்களைப்பற்றி கேள்விப்பட்டிருக்கக்கூடமாட்டோம் 'ரிசன்டோலிய கார்டனர்' என்ற செடி மணம் கமழும் பூக்களை மண்ணுக்குள்ளேயே பூக்கிறது. அவுஸ்திரேலிய காடுகளில் இவற்றை அதிகம் காணலாம்.

## சுப்பர் சொனிக் விமானம்

ஒலியின் வேகத்திற்கு இணையான வேகத்தில் செல்லும் விமானங்களுக்கு சுப்பர்சொனிக் விமானம் என்று பெயர். இவற்றின் வேகம் மணிக்கு சுமார் 1225 கி. மீ. வானில் சுப்பர் சொனிக் விமானம் பறக்கும்போது ஏற்படும் அதிர்வலைகள் பூமியை அடையும்போது வெடிச்சத்தங்கள் போல் கேட்கும். விமானப்படையில் சுப்பர் சொனிக் விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

## 'மரணம்' சிகரெட்

அமெரிக்காவிலுள்ள ஒரு சிகரெட் தயாரிக்கும் நிறுவனம் தான் தயாரிக்கும் சிகரெட்டுக்கு 'மரணம்' (Death) என பெயரிட்டுள்ளது. இந்த சிகரெட் 'பக்கற்'றில் மரணத்தைக் குறிக்கும் மண்டையோட்டின் படமும் இடம்பெற்றுள்ளது. மற்ற சிகரெட்டையும் விட 30 சதம் அதிகவிலையுள்ள இந்த சிகரெட் அதிகமாகவும் விற்பனையாகிறது.

மரணத்திற்கும் அஞ்சாமல் புகைபிடிக்கும் பழக்கத்திற்கு மக்கள் அடிமையாகி விட்டமைக்கு இது ஒரு உதாரணம்.

## உரிமைக்காக உயிரிழந்த சிவனு இலட்சுமணன்;

1977ம் ஆண்டு தலவாக்கொல்லை பகுதியில் டெவன் என்னுமிடத்தில் 75000 ஏக்கர் நிலத்தை அரசு எடுக்க உத்தரவிட்டது.

அதை செயல்படுத்த சென்றவர்களை அத் தோட்ட மக்கள் எதிர்த்தனர்.

எதிர்த்தவர்கள் மீது காவல் துறையினர் சுட்டபோது போராட்டத்தில்கலந்துநின்ற சிவனு இலட்சுமணன் கொல்லப்பட்டார்.

1977 மே 15 நடைபெற்ற இப்போராட்டத்தின் பின்னரே மலையகம் வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகள் ஓரளவு உலகுக்குத் தெரிய வந்தது.

## பட்டிப்பளை படுகொலைகள்

5. 6. 56ல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், அப்போதைய பிரதமருமான திரு. பண்டாரநாயக்கா சிங்கள மொழியை அரச கரும மொழியாக்கும் சட்டத்தைக் கொண்டு வந்தார்.

இதை எதிர்த்து தமிழரசுக் கட்சியின் தலைமையின் கீழ் தமிழ் மக்கள் கொழும்பில் காலி முகத்திடலில் அமைதி வழிப் போராட்டம் நடத்தினர்.

இவர்கள் பௌத்தபிக்குகளாலும் சிங்களக் குண்டர்களாலும் தாக்கப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து தமிழ் மக்கள் இலங்கைத் தீவு முழுவதும் தாக்கப்பட்டனர்.

11.6. 56, 12 6. 56, இல் பட்டிப்பளையில் வாழ்ந்த 150 க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் (பட்டிப்பளை இன்று கல்லோயா என அழைக்கப்படுகின்றது) சிங்களக் காடையரால் வெட்டியும், அடித்தும் கொல்லப் பட்டனர். □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பேனா!

எடுத்தவர் நினைத்ததை
எழுதி நீ முடிக்கிறாய்!
எடுப்பாரின் ஏவலைச்
செய்வதுன் விதியோ?

### தேர்தல்!

ஜனநாயகத்தில் தேர்தல்
ஓரங்கம் என்பார்கள்!
தேர்தலே ஜனநாயகம்
என்பாரும் இங்குள்ளார்!

### உழைப்பவர்!

உழைப்பவர் பின்னாலே
உலகமே திரளுது!
உழைப்பவர் வாழ்க்கை
இன்னுமேன் இருளுது?

### மிதிவண்டி!

காலால் உதைக்கவும்
ஏற்றுக் கொண்டோடுறாய்!
கழுதைபோல் சுமைகளைச்
ஏற்றிக் கொண்டோடுறாய்!

### கட்சி!

கொள்கைக்காய்க் கட்சி
அமைப்போரும் உள்ளார்கள்!
கட்சிக்காய்க் கொள்கை
வகுப்போரும் உள்ளார்கள்!

### குடிசைகள்!

ஏழையின் தேவைகள்
மலர்ந்திங்கே கருகிடும்!
ஏழையின் ஏக்கங்கள்
வளர்ந்திங்கே மறைந்திடும்!

### ஏழைகள்!

தேர்தலில் வென்றிடத்
தோன்றாத் துணையிவர்!
தேர்தலின் பின்னரோ
வேண்டாப் பொருளிவர்!

### விமானம்!

பண்டங்கள் பயணிகள்
கொண்டிதில் செல்லலாம்!
குண்டுகள் கழிவுகள்
மக்கள்மேல் வீசலாம்!

### விற்பனையாளர்!

பொருள்வாங்கும் போதிவர்
மண்ணென்றே சொல்லுவார்!
பொருள்விற்கும் போதிவர்
பொன்னென்றே சொல்லுவார்!

### தியாகம்!

தன்னையே நாட்டுக்காய்
அளி (ழி) ப்பது தியாகம்!
தனக்காக நாட்டையே
அளி (ழி) ப்பது துரோகம்!

### வாக்களிப்பு நாள்!

நாக்குறுதி அற்றவர்கள்
வாரி வழங்குகின்ற
வாக்குறுதிகளை நம்பி
வாக்களிக்கும் நாளிதுவே!

### வேட்பாளர்!

வாக்காளர்ப் பூக்களினைச்
சுற்றிப் பறந்து வந்து
வாக்குத் தேன் குடித்துப்
பறந்து செல்லும் தேனீக்கள்!

......முருகு......


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க் கருவிகள் படைத்த ஆக்கிமீடிசு

குளிக்கும் நீர்த் தொட்டியிலிருந்து வெளியே பாய்ந்த அவர் தலைதெறிக்க ஓடிக்கொண்டிருக்கிறார். அவர் சைராக்கியூசு நாட்டின் புகழ்பூத்த விஞ்ஞானி ஆக்கிமீடிசு. அவர் சைராக்கியூசு வீதிகளிலே அரை குறை ஆடையுடன் ஓடிக் கொண்டிருப்பதைக் கண்டு மக்கள் வியப்படைந்தார்கள்.

சில நாட்களாக அவர் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தார். அவர் வாழ்வுக்கும் சாவுக்குமிடையில் ஊசலாடிக்கொண்டிருந்தார். மன்னனின் புதிய முடியில் வெள்ளி கலக்கப்பட்டிருக்கிறதா? இதனைக்கண்டறியா விட்டால் மன்னனின் வாளுக்கு அவர் இரையாக நேரும்.

முடிபற்றிய எண்ணத்தோடு, வழமைபோல அன்றும் அவர் நீர் நிரம்பிய தொட்டியில் குளிப்பதற்காக இறங்கினார். இறங்கியபோது நீர் வெளியேறியதைக் கண்டார். அதனைக் கண்ட அவரது எண்ணத்தில் ஒரு பொறி தோன்றியது. அது பெரு நெருப்பாக வளர்ந்தது.

மனதை உறுத்திக்கொண்டிருந்த பிரச்சினைக்கு அவர் தீர்வைக் கண்டு கொண்டார். அந்த மகிழ்ச்சியிலேதான் அவர் தம்மை மறந்து ''கண்டேன் கண்டேன்'' (யூரேக்கா! யூரேக்கா!!) என்று கூவியபடி ஓடினார்.

முடியின் நிறைக்குச் சமமான நிறையுடைய பொன்னை அவர் பெற்றார். பொன்னை நீர் நிரம்பிய பாத்திரத்தில் இட்டு வெளியேறிய நீரைச் சேர்த்து அளந்தார். அதே போல் முடியையும் நீரில் ஆழ்த்தி வெளியேறிய நீரைச் சேர்த்து அளந்தார். தூய பொன்னைவிடப் புதிய முடி அதிக நீரை வெளியேற்றியது. இதன் மூலம் புதிய முடியில் வெள்ளி சேர்க்கப்பட்டிருப்பதை உறுதி செய்தார். வெளியேறும் நீரின் அளவைக் கண்டு பிடிக்கப் பயன்படும் கருவி இன்றும் 'யூரேக்காக் கிண்ணம்' எனப்படுகிறது.

இந்த ஆய்வின் மூலம் ஆக்கிமீடிசு உருவாக்கிய உண்மை 'ஆக்கிமீடிசின் தத்துவம்' எனப்படுகிறது.

ஆக்கிமீடிசின் கண்டுபிடிப்பால் மகிழ்ந்த அரசன் அவரைப் போற்றி ஆதரித்தான்.

## ஐம்பது தலைக் கடவுள்

சைராக்கியூசு மன்னன் கைரோ தனது நாடு எந்த நேரமும் எதிரிகளால் முற்றுகையிடப்படலாம் என்று அஞ்சிக் கொண்டிருந்தான். எனவே, எதிரிகளின் தரை, கடற்படைகளை அழிக்கும் கருவிகளை உருவாக்கும் படி ஆக்கிமீடிசிடம் கேட்டான். ஆக்கிமீடிசு ஆற்றல் வாய்ந்த பல பொறிகளை உருவாக்கிக் கொடுத்தார்.

எதிர்பார்த்தபடி உரோமானியர் தரைவழியாகவும் கடல்வழியாகவும் சைராக்கியூசை முற்றுகையிட்டனர். அப்போது ஆக்கிமீடிசு மறைவாக அமைத்திருந்த கருவிகளை இயக்கத் தொடங்கினார். மிகப்பெரிய ஒலியுடனும் வேகத்துடனும் எறிபடைகளையும் கற்களையும் எறிந்தார். அவற்றைத் தடுக்க உரோமானியரால் முடியவில்லை. குறுக்கே நின்றவர்களை அவை தாக்கிக் கொன்றன. ஏனைய வீரர்கள் அவற்றுக்குப் பயந்து சிதறியோடினர்.

கடற்கரைக் கோட்டை மதிற் சுவர்களிலிருந்து வெளியே நீண்டு வந்த மாபெரும் உத்தரங்கள் கப்பல்களைத் தாக்கின. இதனால் பல கப்பல்கள் கடலுள் மூழ்கின. சில கப்பல்கள் இரும்புக்கைகளால் உயர்த்தப்பட்டு கடலில் மூழ்குமாறு விடப்பட்டன. சில கப்பல்கள் மேலே தூக்கிப் பம்பரம் போல் சுழற்றப்பட்டன. அதிலிருந்த வீரர்களும் கருவிகளும் வெளியே விழ நேர்ந்தது. உயர்ந்த கப்பல் வீழ்ந்தபோது அவர்கள் மூழ்கடிக்கப்பட்டனர். கப்பல்களும் மூழ்கின. உரோமானிய மன்னன் மாசெல்லசு பெரும் தோல்வியடைந்து திகைத்தான்.

'சம்புகா' என்ற பெயர் கொண்ட இசைக்கருவி போன்ற மிகப்பெரிய போர்க்கருவியை கடலிலிருந்து இயக்கத் தொடங்கினர். ஒரு பெரும் பாறாங்கல் அதன் மீது விழ்ந்து அதன் முக்கிய பகுதிகளைச் சிதைத்தது. தொடர்ந்து வந்தகற்கள் அதனை முற்றாகச் சிதைத்து நீரில் அமிழச் செய்தன.

உரோமப் பேரரசன் தரைப்படையையும் கடற்படையையும் வேகமாகப் பின்வாங்கும்படி பணித்துத் தப்பி ஓடினான். ஓடியபோது மாசெல்லஸ் ஆக்கிமீடிசைக் 'கேத்திர கணிதப் பிறையேரியசு' என்று குறிப்பிட்டான். ஐம்பது தலைகளும் நூறு தடந்தோள்களும் கொண்ட கிரேக்கத் தெய்வம் 'பிறையேரியசு' எனப்பட்டது. உரோமர்கள் இப்பெரும்கடவுளேதம்மை எதிர்த்துப் போரிடுவதாக அஞ்சி நடுங்கினர்.

— அரி. சதாநந்தன் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரினவாதம் என்றால் என்ன?

"காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு என்ட பழமொழி சரியோ வாத்தியார் ஐயா?"

விறாந்தையில் இருந்த எல்லோரும் வடிவேலுவைப் பார்க்கிறோம். இந்தக் கேள்வியை அவர் ஏன் கேட்டார் என்பது எங்களுக்கு விளங்கவில்லை.

"அதிலை என்ன பிழை?"

வாத்தியாரின் பதிலும் கேள்வியாகவே இருந்தது.

"அப்பிடியெண்டால், தன்ரை இனம் மேலான இனம் எண்டு நினைக்கிறதைப் பேரினவாதம் எண்டு ஏன் குற்றமாகச் சொல்லுகினம்?"

"நீ பிழையாக நினைக்கிறாய் வடிவேலு. தன்ரை இனம் மேலான இனம் எண்டோ பெரிய இனம் எண்டோ நினைக்கிறது பேரினவாதமில்லை. அது இனப்பற்றின்ரை ஒரு வெளிப்பாடு."

"அப்ப பேரினவாதம் எண்டால் என்ன?"

"ஒரு இனம் மற்ற இனங்களின்ரை நியாயமான சிறப்புக்கும் நலன்களுக்கும் பங்கம் விளைவிக்கக்கூடிய முறையிலை தன்னுடைய சிறப்பையும் நலன்களையும் வலியுறுத்திறது பேரினவாதம். மற்ற இனங்களைப் பற்றின வெறுப்பையும் பகைமையையும் தனது இனத்தவரிடம் ஏற்படுத்திறது பேரினவாதம்."

"பௌத்த - சிங்களத்த பேரினவாதம் எண்டு சொல்லுறது அப்ப சரிதானே"

சமலநாதன் தன்னுடைய அபிப்பிராயத்தைச் சொன்னான்.

"மெத்தச் சரி. எந்தக்கட்சி அரசாங்கம் அமைச்சாலும் இந்த விசயத்திலை ஒண்டுதான் நடக்குது. சிறுபான்மையினரின் - குறிப்பாகச் சிறுபான்மைத் தேசிய இனமான தமிழரின் சிறப்புக்கும் நலனுக்கும் பங்கம் விளைவிக்கக்கூடிய முறையிலை பௌத்தத்துக்கும் சிங்களத்துக்கும் தனியான முக்கியத்துவம் குடுக்கினம், எல்லாத் துறையிலையும் தமிழரை ஒதுக்கிச் சிங்களவருக்கு முதலுரிமை குடுக்கினம். தமிழற்றை தாயகத்தை அபகரிச்சுச் சிங்களவரைக் குடியிருத்துகினம். சிங்களவர் தமிழரிலை வெறுப்பும் பகைமையும் கொள்ளக்கூடிய முறையிலை மகாவம்சக் கட்டுக்கதையளை வரலாறு எண்டு படிப்பிக்கினம். அரசாங்கமே இதுகளைச் செய்யுது. இது பேரினவாதம் இல்லாமல் வேறை என்ன?"

பேரினவாதக் கருத்துக்களை நிராகரிக்கும் சிங்களவர்களும் இருப்பதை நாங்கள் மறக்கக்கூடாது என்று நான் சொன்னேன்.

"அது சரி. அப்பிடியான சிலர் எழுதின நல்ல கட்டுரையளை நானும் வாசிச்சிருக்கிறன். ஆனால் பொதுப்படையாகச் சிங்கள மக்கள் மத்தியிலை பேரினவாதக் கருத்து வேரூண்டியிட்டுது. பேரினவாதிகள் சந்தர்ப்பங்களைக் கெட்டித்தனமாகப் பயன்படுத்தியிருக்கினம்."

"சந்தர்ப்பங்கள் எண்டு நீங்கள் சொல்லுறது என்ன ஐயா?"

சங்கக்கடைச் சண்முகராசா கேட்டார்.

"1883 ம் ஆண்டு கொட்டாஞ்சேனையிலை கிறிஸ்தவர்களுக்கும் பௌத்தர்களுக்குமிடையிலை கலவரம். 1915 இலை முஸ்லிம்களுக்கும் சிங்களவருக்குமிடையிலை கலவரம். முப்பதுகளிலை மலையாளத் தொழிலாளருக்கு எதிராகச் சிங்களவர் கலவரம். 1956 இலும் அதுக்குப் பிறகும் தமிழருக்கு எதிராகச் சிங்களவர் கலவரம். இந்தக் கலவரங்களையெல்லாம் பேரினவாதிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தினார்கள். உணர்ச்சிவசப்பட்டிருந்த சிங்கள மக்களின் மனங்களில் பேரினவாத நச்சு விதைகளைத் தூவினார்கள். அந்நியரால் மண்ணின் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் எண்டும், புத்த சமயத்தைப் பாதுகாக்காவிட்டால் சிங்களவர் இறப்பது மேலானது எண்டும் அநகாரிக தர்மபாலா அடிக்கடி எழுதினார். இலங்கைப் புத்தரால் தேர்ந்தெடுக்கப்பட்ட தர்மத்தீவு எண்ட கருத்தும் அது சிங்களவருக்கே சொந்தமானது எண்ட கருத்தும் பலமாக முன்வைக்கப்பட்டன. இந்தமாதிரிப் பிரசாரங்களாலை சிங்கள மக்கள் மத்தியிலை பேரினவாதம் ஆழமாக வேரூண்டியிட்டுது."

"இன ஐக்கியம் ஏற்பட்டால் பேரினவாதம் தானாகச் செத்துவிடும் எண்டு நான் நினைக்கிறன்."

இது வடிவேலுவின் கருத்து.

"அது பிழை, இன ஐக்கியத்துக்குத் தடையாக இருக்கிறது பௌத்த சிங்களப் பேரினவாதம். அதைத் தோற்கடிக்கிறது தான் இன ஐக்கியத்தை ஏற்படுத்திறதுக்கான ஒரே வழி. இந்தப் பேரினவாதத்துக்கு எதிரான போராட்டம் கருத்துரீதியாகவும் நடைமுறைரீதியாகவும் இருக்கவேணும். சிங்கள மக்கள் தான் அந்தப் போராட்டத்தை ஆரம்பிக்கவேணும். அதுவரை இன ஐக்கியம் பற்றிப் பேசிறது வெறும் வாய்ப்பந்தல்."

அன்றைய உரையாடல் அத்துடன் முடிந்தது.

—ஞானகுரு—

## வாத்தியார் வீட்டு விறாந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏவுகணைகள்

ஈராக்கிற்கும், அமெரிக்கத் தலைமையிலான பன்னாட்டுப் படைகளுக்கும் இடையில் போர் நடைபெற்றது பற்றி உங்களுக்குத் தெரியும். போர் செய்திகளில் 'ஸ்கட்', 'பேட்ரியாட்' போன்ற வார்த்தைகள் அடிக்கடி அடிபட்டதும் நீங்கள் அறிந்தது தான். இல்லையா? அவை எல்லாம் என்ன?

'ஸ்கட்' 'பேட்ரியாட்' போன்றவை ஏவுகணைகளாகும். நீங்கள், இராமாயண, மகாபாரத கதைகளில் ஒருவர் ஒரு கணையைத் தொடுக்க, அதனை எதிர்த்து, அவர் எதிரி மற்றொரு கணையைத் தொடுத்து, அதனை அழிப்பதைப் படித்திருப்பீர்கள். அது இதிகாச காலத்தில். தற்பொழுது அறிவியலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தால் வில்லுக்கும் அம்புக்கும் பதிலாக ஏவுகணைகள் பயன்படுத்தப்படுகின்றன.

சாதாரணமாக ஏவுகணைகள் தூரத்தில் உள்ள இலக்கைத் தாக்குவதற்குப் பயன்படுகின்றன. நீங்கள் பெரிய மரத்தில் உள்ள மாங்காயைப் பறிக்க கீழிருந்து கல் எறிகிறீர்கள் இல்லையா? அதேபோல, மேலே பறக்கும் விமானம், கீழே உள்ள சில முக்கிய இராணுவதளம் போன்ற இடங்களை அழிக்க இந்த ஏவுகணைகள் பயன்படுகின்றன.

இந்த ஏவுகணைகள், வானில், நிலத்தில், நீரில் உள்ள இலக்குகளைத் தாக்கக் கூடியவை. அவற்றின் திறமையைப் பொறுத்து, நிலத்திலிருந்து வான் நோக்கிப் பாயும் ஏவுகணைகள் (Surface to Air Missiles) என்றும், வானிலிருந்து நிலம் நோக்கிப் பாயும் ஏவுகணைகள் (Air to Surface Missiles) என்றும், நீரிலிருந்து நீருக்குள் பாயும் ஏவுகணைகள் (under water to under water Missiles) என்றும், வானிலிருந்து வான் நோக்கிப்பாயும் ஏவுகணைகள் (air to air missiles) என்றும், நிலத்திலிருந்து நிலம் நோக்கிப் பாயும் ஏவுகணைகள் (Surface to surface Missiles) என்றும் நிலத்திலிருந்து நீருக்குள் பாயும் ஏவுகணைகள் (Surface to water Missiles) என்றும் நீரிலிருந்து வான் நோக்கிப் பாயும் ஏவுகணைகள் (water to surface Missiles) என்றும் பல வகை ஏவுகணைகள் உள்ளன.

இந்த ஏவுகணைகளில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று உந்துவிசை (ballistic) ஏவுகணை. இது நீண்ட தூரம் செல்லக் கூடியது. மற்றொன்று நெறிப்படுத்து ஏவுகணை (guided Missiles). ஒரு குறிப்பிட்ட இலக்கைத் தாக்க, இதனைக் கட்டுப்படுத்திச் செலுத்தலாம். இந்த நெறிப்படுத்து ஏவுகணைகள், பெரும்பாலும், எதிரிகள் ஏவும் உந்துவிசை ஏவுகணைகளை அழிக்கவேபயன்படுகின்றன. வளைகுடாப் போரில் பன்னாட்டுப் படைகளால் பயன்படுத்தப்பட்ட 'பேட்ரியாட்' ஏவுகணைகள் நெறிப்படுத்து வகையைச் சேர்ந்தவை. இவை, தானே உந்திச் செல்லக் கூடிய, அழிக்கும் ஊர்திகளைக் (destructive load) கொண்டவை. இவை முன்னரே தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்கை நோக்கித் தம் பாதையை அவ்வப்போது மாற்றி அமைத்துக் கொண்டு விரையும் திறம் படைத்தவை.

எல்லா ஏவுகணைகளிலும், காற்றுச் சட்டம் (airframe), இறக்கைகள் (wings) செவுள் போன்ற அமைப்பு (fins), மோட்டரைக் கட்டுப்படுத்தும் அமைப்பு, நெறிப்படுத்தும் அமைப்பு, ஆகியன உண்டு. அணுகுண்டு போன்று ஏவுகணையில் பொருத்தி அனுப்பப்படும் ஆயுதங்கள் மற்றும் அழிவை உண்டாக்கும் போர்த் தளவாடங்களும் (War heads) இவற்றில் அடங்கும்.

ஒரு ஏவுகணையின் திறன் அது செல்லும் தூரம் மற்றும் அதிலுள்ள மோட்டரைப் பொறுத்து அமைகிறது. கண்டங்களுக்கிடையே ஏவப்படும் ஏவுகணை (Inter Continental Ballistic Missiles ICBM) இவ்வகைகளில் மிகப் பெரியவை. இவை 8000 கி. மீ. தொலைவும் 1,600 கி. மீ. உயரமும் செல்லக் கூடியவை.

ஒரு ஏவுகணையின் மிக முக்கிய பகுதி, அதிலுள்ள நெறிப்படுத்தும் பகுதியாகும் (guidance system). இந்த அமைப்புதான் ஏவுகணைகள் தம் இலக்கை நோக்கிச் சரியாகச் சென்று தாக்க உதவுகின்றன.

சிறு தொலைவே செல்லும் ஏவுகணைகள் கம்பிகள் மூலம் தொடர்பு கொண்டு வழி நடத்திச் செல்லப்படுகின்றன. ஏவுகணைக் கட்டுப்பாட்டு அறையிலிருந்து உண்டாக்கப்படும் மின் அலைகளுக்கேற்ப, ஏவுகணை இயங்கி இலக்கை அடைகிறது. இத்தகைய ஏவுகணையின் வீச்சு சுமார் 3 கி. மீ. தான் சில ஏவுகணைகள் கம்பியில்லா முறையில் வழி நடத்திச் செல்லப்படுகின்றன.

இப்பொழுது கண்ணுக்குத் தெரியாத தொலைவில் இருக்கும் இலங்கைத் தகர்க்க வேண்டும். இதற்கு கட்டுப்பாட்டு மையத்திலிருப்பவர் அந்த இலக்கைப் பற்றி நன்கு அறிந்திருக்கவேண்டும் இல்லையா? அதற்கென கட்டுப்பாட்டு அறையில் டி. வி. திரை ஒன்று வைக்கப்பட்டிருக்கும். இலக்கை நோக்கி ஏவுகணை செல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் போது அதன் மூக்கின் நுனியில் இருக்கும் கெமரா, இலக்கை நன்றாகப் படமெடுத்து, கட்டுப்பாட்டு அறையிலுள்ள ரி. வி. திரையில் தெரியும்படி அனுப்பும். அப்பொழுது, இலக்கின் எந்தப் பகுதியை நன்றாகத் தாக்கவேண்டுமோ, அதற்கேற்றாற் போல் ஏவுகணை கட்டுப்படுத்தப்படுகிறது.

சில சமயங்களில் ஏவுகணை ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கிச் செல்லாமல், திசை மாறவும், சென்ற பாதையிலேயே திரும்பி வருவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. அந்தச் சமயங்களில் சேதம் ஏற்படாமல் அதனைச் செயலிழக்கச் செய்ய, இந்த ரி. வி. கெமரா வழிப்படுத்துமுறை பயன்படுகிறது.

நாம்முன்பு கூறிய நெறிப்படுத்து வகை ஏவுகணைகள் ரேடார் கட்டளை துணை கொண்டு (Radar Command guidance) வழி நடத்தப்படுகின்றன. இம்முறையால், இரவு நேரங்களிலும் எந்த விதமான தட்பவெப்ப நிலைகளிலும் ஏவுகணையைச் செலுத்த முடியும்.

மற்றொரு நெறிப்படுத்துமுறை, குண்டு வீசும் ஏவுகணைகளுக்கென்றே உள்ளது. இந்த முறையில் அகச் சிவப்பு கதிரைக் கண்டறியக் கூடிய (Infra red seeking head) கருவி, ஏவுகணையில் பொருத்தப்பட்டிருக்கும். இது எங்கிருந்து வெப்பக் கசிவு வந்தாலும், உதாரணமாக ஒரு விமானத்தின் ஜெட் எஞ்ஜினிலிருந்து வரும் வெப்பத்தைக் கூட உணர்ந்து அதன் மீது குண்டு போட்டுவிடும். இதே போல், ஏவுகணையிலிருந்து லேசர் கதிர்களை செலுத்தி, எதிரொலிக்கப்பட்ட கதிர்கள் மூலம், இலக்கின் இடத்தை நன்கு அறிந்து அங்கு குண்டு வீசப்படுகின்றன.

எல்லாவற்றையும் விட சிறந்த வழிப்படுத்து முறை சடத்துவ நெறிப்படுத்து (Inertial guidance) முறையாகும். இம்முறையில் ஏவுகணைக்குள் பல, ஆக்ஸிலெரோ மீட்டர்களும் கைராஸ்கோப்புகளும் இருப்பதால், ஏவுகணையின் பயணத் திசையில் சிறிய மாறுதல் ஏற்பட்டாலும் அதனைத் திருத்தி இலக்கை அடைய முடிகிறது.

ஏவுகணைகளில் அடுத்த முக்கிய பகுதி, இலக்கைத்தாக்க, அது எடுத்துச் செல்லும் அணுகுண்டு போன்ற போர்த்தளபாடப் பகுதியாகும். ஏவுகணைகள் எல்லா வகையான நவீன போர்த் தளபாடங்களையும் எடுத்துச் செல்லும் ஆற்றல் பெற்றவை. சில ஏவுகணைகள், குறிப்பிட்ட நேரத்தில் பல குண்டுகளை வெவ்வேறு திசை வேகத்தில் செலுத்தும் ஆற்றல் பெற்றவை. இதனால் பல்வேறு இலக்குகளை ஒரே சமயத்தில் தாக்க முடிகிறது.

இத்தகைய ஏவுகணைக்கு முன்னோடி V2 வகை ஏவுகணையாகும் இவை இரண்டாம் உலகப் போரில் லண்டன் மீது ஜெர்மனியால் ஏவப்பட்டன. சரி! இத்தகைய ஏவுகணைகளுக்கு வித்திட்டவர் யார் தெரியுமா? டாக்டர். வெர்னர் வான் பிரான் என்பவர். கண்டம் விட்டு கண்டம் தாவும் ஏவுகணைக்கு வித்திட்டவரும் இவரே.

—துளசிர்

சிறு சித்திரம்

## கணிப்பு

*அந்த அரச அலுவலகத்தில் ஒரு மாநாடு நடந்தது. குடாநாட்டில் உணவு நெருக்கடி உள்ளதா? இல்லையா என்று பார்ப்பதற்காகக் கொழும்பிலிருந்து ஒரு உயர் அதிகாரி வந்திருந்தார். தமிழ் மக்கள் பற்றி அறிய வந்த அவருக்குத் தமிழ்தெரியாது. அவருக்கு ஆங்கிலத்தில் இங்குள்ள சூழ்நிலையை எப்படி விளக்குவது என்பதைப் பற்றியே மேற்படி மாநாட்டில் பேசப்பட்டது.*

*தமிழ் மக்கள் உணவு நெருக்கடியால் அவதிப் படுத்துவதை உணர்வு பூர்வமாக, சற்று மிகைப் படுத்தியேனும் சிறப்பு ஆங்கிலப் பதங்களைப் பிரயோகித்து எழுதி அவருக்கு வழங்குவது என்பது தான் மாநாட்டின் முடிவாகும். அச்சிறப்புப் பதங்களைத் தேர்ந்தெடுப்பதற்கென்றே மூன்று நாளாக அறிஞர் குழுவொன்று 'தேடல்' செய்தது. 'மகஜர் தயாரிப்பு நிதி' ஒதுக்கீடு செய்யப்பட்டு. கணக்காளரால் பல ஆயிரங்கள் வழங்கப்பட்டு, மகஜர் தயாரிக்கப்பட்டது.*

*நல்ல வரவேற்புடன் அவ்வுயர் அதிகாரியிடம் அலுவலகப் பொறுப்பதிகாரி மகஜரைக் கையளித்தார். 'அடுத்த மாதத்திற்குள் உணவு அனுப்பாவிடில் இங்கு பட்டினிச்சாவு தவிர்க்க முடியாததாகிவிடும்' என்ற இறுதி வார்த்தையுடன் மகஜர் முடிக்கப்பட்டிருந்தது. மக்கள் படும் அவலங்களை விளக்கிக் கூறிவிட்ட திருப்தி அவர்களுக்குள்!*

*மகஜரை வாங்கிக் கொண்டு அதிகாரி சொகுசு காரில் புறப்பட்டார். வழியில் ஒரு மரண ஊர்வலம்! விசாரித்ததில் ''பட்டினியால் இறந்த ஒருவரது ஊர்வலம்'' என்பது தெரியவந்தது.*

-ஏகலைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானி என்பவன் யார்?

1. அவதானிப்பவன்

சேர்ந்தமைச் சூழ உள்ள செறிவுகள் வளங்களோடு
சார்ந்திடா திருந்து கொண்டே சருவிட முனையும் பான்மை
ஆய்ந்து தேர்ந்தோர்ந்து பார்க்கும் அரியதோர் இயல்பு கூடிக்
கூர்ந்தவ தானிக்கின்ற குணம் உள்ளோன் ஒரு விஞ்ஞானி.

2. செய்து பார்ப்பவன்

செவிகளில் வீழுஞ் சேதி சிதையலாம் மறக்கக் கூடும்
கண்களாற் காணுங் காட்சி கருத்தினில் நிலைக்கும், ஆனால்
உடல் உளம் ஒத்திசைக்க அநுபவம் ஊட்டுஞ் செய்கை
செய்துதான் பார்க்கும் சீர்மை படைத்தவன் ஒரு விஞ்ஞானி.

3. பேறுகள் பதிவு வைப்பவன்

ஆறுகள் கிளைகள் ஆகி அடங்கலும் பிரிதல் போலக்
கூறுகள் கூடிப் போகக் குப்பையாய்க் குமைதல் விட்டு,
சேருநற் பெறுபேறெல்லாம் சிதறியே சிதையா வண்ணம்
பேறுகள் பதிவு வைக்கும் பண்பு உள்ளோன் ஒரு விஞ்ஞானி.

4. அட்டவணை ஆக்குபவன்

எதிலுமே தெரிவுசெய்து ஏற்றவை ஒன்றுசேர்க்கும்
புதுவினை புரியும் ஆற்றல் புத்தெழில் ஊக்கம் நல்கும்
அதில் ஒரு கோலங்கண்டோர் அமைப்பினில் அடக்கும் பாங்கிற்
பதிவை அட்டவணை ஆக்கும் பண்புள்ளோன் ஒரு விஞ்ஞானி.

5. படவிளக்கம் அளிப்பவன்

குடம் அதுள் விளக்குப் போலக் குன்றிடுந் துலக்கம் நீக்கி
அனைவரும் உணரும் வண்ணம் அழகிய நிறங்கள் தீட்டி,
படமதிற் கீறிக்காட்டிப் பாலரும் புரியுமாறு
படவரைபு ஒன்றின்மூலம் விளக்குவோன் ஒரு விஞ்ஞானி.

6. தொடர்புள்ள நூல்கள் கற்போன்

சலசலத் தார்ப்பரிக்குஞ் சில்லறைக் கோதாகாது
நிறைகுடம் உறுதியோடு நிலை தளும்பாது நிற்க,
கசடறக் கற்ற பின்பே கவினுறும் கலையை நோக்கித்
தொடர்புடை நூல்கள் கற்றுத் துலங்குவோன் ஒரு விஞ்ஞானி.

7. தொடர்புள்ளோருடன் கலந்துரையாடுபவன்

தடல்புடல் ஆகப் பேசித் தன்னையும் மலினமாக்கிக்
கெடுபிடி புரிதல் விட்டுக் கரிசனையோடு காணும்
சமநிலை ஈடுபாட்டிற் சமர்ப்பணம் ஆனோர் சேர்க்கை
தொடர்புள்ளோர் கருத்தைக்கேட்டுத் தெளிபவன் ஒரு விஞ்ஞானி.

8. பொருத்தமாகப் பிரயோகித்துப் பார்ப்பவன்

ஒருமுறை கண்ட தீர்வை உண்மை என்றெண்ணிக் கொண்டே
உருப்படிக் கணக்கிலாக உடன் அதை முன்வைக்காது
பருப்புடன் நெய்யைச் சேர்க்கும் பக்குவத்தருணம் பார்த்துப்
பொருத்தமாய்ப் பிரயோகித்துப் பார்ப்பவன் ஒரு விஞ்ஞானி.

9. கருத்துகோள் முன்வைப்பவன்

கற்பனைப் பூந்தேரில்ஏறிக் காதலித்துப் பித்தாகி
வித்துவத்து வேட்கைமேவி விதிர்விதிர்த்து வெறி கொள்ளாது
வருவழியிற் காலைஊன்றி, வந்த வழி பிறழ்வும் இன்றிக்
கருதுகோள் முன்வைக்கின்ற கலைஞனே ஒரு விஞ்ஞானி.

10. விதி வருவிப்பவன்

இனிவரும் இனிய காலம் இதமுடன் ஈர்க்குமாறே
புதுமலர் பூக்கும் போது பூந்துகள் தாதுவீசும்,
எதுவரும் என்றே பார்த்த வழிவழி திரண்டு சேர்ந்த
விதி வருவிக்கும் வல்லவீரனே ஒரு விஞ்ஞானி.

— இ. சிவானந்தன் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “இன்னொரு காடு- இன்னொரு போர்”

## அமெரிக்க இனவாதம்

அமெரிக்காவின் கடந்த 25 வருடகால வரலாற்றிலேயே காணப்படாத மிக மோசமான கலவரம் அண்மையில் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரிலே நடந்து முடிந்தது. உலகத்தின் மனச்சான்றினை உலுப்பிய இக் கலவரம் அமெரிக்காவின் உண்மை முகத்தினை அம்பலப்படுத்திற்று. றொட்னி கிங் என்கின்ற கறுப்பினத்தவர் வெள்ளை இன காவல்துறையினரால் மோசமாக தாக்கப்பட்டார். தற்செயலாக இதனைக் கண்ணுற்ற ஒருவர் அதனை வீடியோவாக்கினார். நீதிமன்றிலே நீதி பிறழ்ந்தது. காவல் துறையினர் விடுதலை செய்யப்பட்டனர். உலகமே இத்தீர்ப்பினை கண்டித்தது. தொடர்ந்து கலகம் மூண்டது. வீடியோவில் 81 செக்கனே நீடித்த பொலிஸ் தாக்குதல் பெரும் கலவரமாக 72 மணித்தியாலங்கள் நீடித்தன. இப்படியான கலகங்களில் ஈடுபடக்கூடிய ஆசிய வாலிபனொருவனின் மனநிலை இங்கே பிரதிபலிக்கப்படுகின்றது.

இக் கம்போடிய வாலிபன் 9 வருடங்களின் முன் தனது 10 வயதில் அமெரிக்காவில் வந்து குடியேறியவன்.

---

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து ஒரு நல்ல மகிழ்ச்சியான வாழ்வுக்காக ஏங்கினேன். அழகிய வீடுகள், வானளாவிய மாடிகள், பல விமானங்கள், நவீன வாழ்க்கை வசதிகள் நிரம்பிய அமெரிக்காவே எனது இலட்சிய பூமியாக நான் எண்ணினேன். ஏனென்றால் என் வாழ்வு கம்போடியாவில் அவ்வளவு மோசமாக, பரிதாபகரமானதாக இருந்தது. கம்போடிய காடொன்றில் - அகதி முகாம் -சேற்றிலும் அழுக்கிலும் மூக்கை துளைக்கும் நாற்றத்திலும் என் இளமை கழிந்தது. நரக வாழ்வாக அதனைக் கருதினேன். போரிலிருந்தும் படுகொலைகளிலிருந்தும் விடுபட விரும்பினேன். கம்போடியாவை நான் வெறுத்தேன். இறுதியில் ஒருவாறாக அமெரிக்கா வந்தடைந்தேன். புதுவாழ்வு கிட்டிற்று என எண்ணினேன். இனி போர், வறுமை இல்லை. தப்பிவிட்டேன் என பெருமூச்சு விட்டேன். கம்போடிய காடுகளில் கழுதைகள் போலவே வாழ்ந்த வாழ்வு முடிந்ததாக கருதினேன். ஆனால் நடந்தது என்ன? என்னைப்போல் ஒரு வந்தேறு வாசிக்கு அமெரிக்கா சொர்க்கமாக தெரியவில்லை. இன்று இந்நாடு வேறொரு காடாகவும், இங்கு நடப்பது வேறொரு வகைப் போராகவும் எனக்குப் படுகின்றது. இங்கு வீசும் இந்த நாற்றமும் கம்போடிய நாற்றம் போலவே இருக்கின்றது.

இங்குள்ள சாதாரண அமெரிக்கன் எங்களைப் பற்றி என்ன நினைக்கிறான். இவர்கள் மிகக் கடுமையாக உழைத்து வசதியாக வாழ்கிறார்கள் என நினைக்கிறான். முன்பு ஒருவேளை அப்படி இருந்ததோ தெரியாது. ஆனால் இன்று அப்படி இல்லை. வசதியான வாழ்வொன்றினை இங்கு வாழ நீ விரும்பினால் பொய்யனாக, மோசக்காரனாக இங்குமாறவேண்டும். அல்லாவிட்டால் என் பெற்றோர் போன்று சேரிப்புறங்களிலே மோசமான வீடுகளிலிருந்து விடியற்காலை 3 மணிக்கு எழுந்து வேலைக்குச்சென்று மாலைவரை உழைக்க வேண்டும். அப்படியாயின் என்னைப்போன்ற சிறுவர்களை கல்விக்கூடம் அனுப்பமுடியாது. அதற்கான பணவசதி குடும்பத்தில் இராது. நீயும் உழைக்கவேண்டும். பெற்றோரின் அன்போ அரவணைப்போ உனக்குக் கிட்டாது. நீ தனியனாகி விடுவாய். இறுதியில் உன் கதை இப்படித்தான் ஆகும். போதைப் பொருட்களை விற்பாய். நீயும் உட்கொள்வாய். போட்டிச் சண்டைக் குழுக்களில் சேருவாய். ஓயாமல் போதையால் ஈடுபட்ட சண்டைக்காரனாக மாறுவாய். மற்றவர்களை சுடுவாய். காவல்துறை மீதும் நீ சுடுவாய். அவர்களும் உன்னைச் சுடுவர். இறுதியில் இளம் வயதில் நீ மரணிக்க நேரிடும். வெறுப்பு எனும் நஞ்சு விதைக்கப்பட்ட இம் அமெரிக்க சமுதாயத்திலே முட்டாள் தனமான கோபக்காரனாக நீ மாறுவாய். இவ்வாறு வாழ்வதை விட எப்படியும் வாழ்ந்து விரைவில், இளம் வயதில் இறப்பதே மேல் என்ற முடிவிற்கே நீ வருவாய்.

இன்று அமெரிக்காவை நான் வெறுக்கிறேன். எனக்கு முன்னர் உணர்த்தப்பட்ட நாடல்ல இது. நான் இங்கு காண்பது என்ன? தெருவெங்கும் உடைந்த பியர் போத்தல் துண்டங்கள். வானமே கூரையாக கொண்டு அலையும் வீடற்ற குடிகாரர் கூட்டம். ‘நீ நாசமாய்ப்போவாய்’ என்ற இழிசொற்களைக் கேளாமல் நான் எவ்வீதியாலும் திரிந்தது கிடையாது.

மீண்டும் நான் வெறுப்பு, காழ்ப்பு எனும் நச்சுச் சிலந்தி வலைக்குள் சிக்கிவிட்டேன். மறக்க முனைந்த பழைய மனநிலைக்கே சென்று விட்டேன். போரிலிருந்தும் படுகொலைகளிலிருந்தும் தப்பி வந்தவன் இங்கு வேறொரு வகைக் காட்டில்-இன்னொரு புதிய போரில் சிக்கி விட்டேன். வெறுப்பையும், காழ்ப்பையும் உமிழும் புதிய போர் இது.

— பாலகுமார் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகத்தின் மூலையில் ஒரு சிறு குறிப்பு

1900 ஆகஸ்ட் மாதம் 8 ம் தேதி, பாரிஸில் இரண்டாவது அகில உலக கணிதவியல் மாநாடு. நான்கு வருடத்திற்கு ஒருமுறை நடக்கும் இம்மாநாட்டிற்கு உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கணித அறிஞர்கள் வந்திருந்தனர்.

38 வயதே ஆன டேவிட் கில்பர்ட் (David Hilbert) என்ற கணித அறிஞர் அன்று ஒரு முக்கிய உரையாற்றினார்.

அடுத்த 50 ஆண்டுகளுக்கும் மேல் பலமுறை மேற்கோள் காட்டப்பட்ட மிக முக்கியமான உரை அது.

அவர் அந்த உரையில் பலகாலமாக கணித அறிஞர்களின் பிடிக்குச் சிக்காமல் நழுவும் 23 கணித சிக்கல்களை சுட்டிக்காட்டினார். இச்சிக்கல்கள் கணிதவியலுக்கு மிகப் பெரிய சவால் என்று குறிப்பிட்டார்.

அதில் ஒரு சவாலாக அவர் குறிப்பிட்டது, பெர்மாட்டின் கடைசித் தோற்றம். 1630 ல் தோன்றிய இந்த கணித சிக்கலின் ஆரம்பம் மிகச் சுவையானது.

பெர்மாட் தொழில்முறையில் ஒரு வழக்கறிஞர், கணிதம் அவரின் பொழுது போக்குதான். பொழுது போக்காக கணித ஆய்வுகளை மேற்கொண்ட அவர், கணிதவியலின் பல்வேறு சிக்கல் நிறைந்த பகுதிகளில் பல புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தினார். வரைகணிதம், கால்குலஸ் நிகழ்தகவு கோட்பாடுகள் முதலிய கணிதவியலின் பகுதிகளில் பல ஆய்வுகளை மேற்கொண்டார்.

தான் ஒரு முழு கணிதவியல் ஆராய்ச்சியாளர் இல்லை என்றும் ஆகவே, தான் பல தவறுகளை இழைக்கக் கூடும் என்றும் கருதி தனது ஆய்வின் முடிவுகள் பலவற்றை வெளியிடவே இல்லை. பல முடிவுகளைச் சமகாலத்தில் வாழ்ந்த வேறு கணித அறிஞர்களுக்குக் கடிதங்களாகவே எழுதினார். ஒரு சில விடயங்களை மட்டுமே கட்டுரையாக வடித்தார். பல விடயங்களை அவரது நாட்குறிப்பில் மட்டுமே குறித்து வைத்தார்.

1453 இல் கான்ஸ்டாண்டிநோபில் துருக்கியர்களின் பிடியில் சிக்கியது. அப்பொழுது கான்ஸ்டாண்டிநோபிலில் இருந்த பல அறிஞர்கள் ஐரோப்பாவில் புகலிடம் தேடி ஓடினர். அவ்வாறு புகலிடம் தேடி வருகையில் பல பண்டைய ஆராய்ச்சி சுவடிகளை எடுத்து வந்தனர். பண்டைய கிரேக்க ஆராய்ச்சி ஏடுகள் பலவும் அதில் அடங்கும். அதில் ஒன்று டையோபாண்டஸ் (Diophantus) எழுதிய 'அரித்மெதிகா' எனும் புத்தகம். இந்தப் புத்தகம் 1621 இல் ஐரோப்பாவில் மறுவெளியீடாக வெளியிடப்பட்டது. இப்புத்தகத்தைப் படித்த பின்னரே பெர்மாட் எண் கணிதத்தில் ஆர்வம் செலுத்தத் தொடங்கினார்.

'அரித்மெதிகா' வில் இருந்த ஒரு சுவையான பிரச்சினை பெர்மாட்டின் கவனத்தை ஈர்த்தது.

$3^2 + 4^2 = 5^2$ என்பதை நாம் பார்க்கலாம். ஆனால் இதேபோல் மூன்றுபடிகள் உயர்த்தப்பட்ட எண்கள் ஏதாவது இரண்டின் கூட்டுத்தொகை மறுபடியும் வேறு எண்ணின் மூன்றுபடியாக இருக்குமா என்பதே பிரச்சினை.

அதாவது $x^3 + y^3 = z^3$ என்ற முறையில் x, y, z என்ற மூன்று எண்களை கண்டுபிடிக்க முடியுமா?

X க்கு ஒரு மதிப்பும் Y க்கு ஒரு மதிப்பும் எனப் பல எண்களுக்குக் கொடுத்துக் கணக்கிட்டு வரும் விடை ஏதாவது ஒரு எண்ணின் மூன்றுபடியா எனப் பார்க்கலாம். ஆனால் இது முடிகிற காரியமா? எவ்வளவு எண்கள் உள்ளன. எண்ணிலடங்கா எண்களை இவ்வாறு செய்து பார்க்கவா முடியும்? புதிய கணனிகளைக் கொண்டு இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயன்றாலும் சாத்தியமில்லை. எண்கள் எண்ணிலடங்காதவை அல்லவா?

வேறுபல கணிதவியலின் தேற்றங்களைக் கொண்டு $x^3 + y^3 = z^3$

என்ற சமன்பாட்டிற்குத் தீர்வு இல்லை என நிரூபித்தார். இத்துடன் நிற்கவில்லை. இதிலிருந்து பொதுமைப்படுத்தி

$x^4 + y^4 = z^4$, $x^5 + y^5 = z^5$

## லேசர் கதிர் (Laser)

இன்று லேசர் கதிரின் பயன்பாடு பெரிதும் போற்றப்படுகின்றது. அறிவியல், மருத்துவம், விண்வெளி ஆராய்ச்சி என எல்லாவற்றிலும் லேசர் கதிர் பயன்படுத்தப்படுகிறது. இந்த லேசர் எப்போது கண்டு பிடிக்கப்பட்டது தெரியுமா?

1960ம் ஆண்டு இது கண்டு பிடிக்கப்பட்டது. ஒளியைப் பெருக்க முடியும் என்ற எண்ணத்தின் விளைவாக 'ஹக்ஸ்' விமானத் தொழிற்சாலையில் இது ஏற்படுத்தப்பட்டது. Light Amplification by Stimulated Emission of Radiation என்பதன் சுருக்கமே LASER ஆகும். செயற்கை மாணிக்கம், கண்ணாடிப் படிகம், ஹீலியம், நியான் வாயுக்கள் என்பவற்றிலிருந்து இது தயாரிக்கப்படுகிறது. ஒற்றை அதிர்வு எண்களில் மின்காந்தக் கதிர் வீச்சுகளை வெளியிடும் லேசர் ஒளிக் கதிர்களைப் போலல்லாது, இணையாகச் செல்பவை. இதனால் இது விண் வெளிப் பயணத்தில் அதிகம் பயன்படுகிறது.

—ஏகலைவன்—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற இரண்டு படிகளுக்கு மேல் எதற்கும் தீர்வு இல்லை எனக் கூறினார்.

'அரித்மெதிகா' புத்தகத்தைப் படிக்கும் பொழுது பெர்மாட் அந்த புத்தகத்தின் ஒரு மூலையில் ''இந்த விசயத்தில்-

$$x^n+y^n=z^n$$

என்பதற்கு n- இரண்டுக்கு மேல் இருக்கும் பொழுது தீர்வு இல்லை என்பது எனக்குத் தெரியும். அதற்கான நிருபணத்தை இந்தச் சிறிய இடத்தில் எழுதமுடியாது'' என்று குறிப்பிட்டிருந்தார். வேறு எவருக்கும் இதைப் பற்றி எழுதவில்லை. வேறு எங்கும் முழு நிருபணத்தைக் குறிக்கவும் இல்லை.

அவர் இறந்தபிறகு பெர்மாட்டின் மகன் தன் தந்தையின் அனைத்துக் குறிப்புகளையும் வெளியிட்டார். அதன் பின்தான் கணித உலகமே இவ்விடயத்தைப் பற்றி அறிந்தது. இந்தக் குறிப்பை எழுத எது பெர்மாட்டைத் தூண்டியிருக்கக்கூடும் என ஆய்வுகளை மேற்கொண்டனர். பெர்மாட் வேறு எங்காவது இதற்குத் தீர்வு எழுதி வைத்துள்ளாரா என்று தேடத் தொடங்கினார். அவர்களுக்கு எதுவும் தடயம் கிடைக்கவில்லை. பின் பலர் தாங்களாகவே இப்பிரச்சனைக்குத் தீர்வு காணமுடியுமா என்ற முயற்சியில் இறங்கினர்.

1847 இல் லெமே (Lama) என்ற உலகப் புகழ் பெற்ற கணித அறிஞர் பாரிஸ் அகாதெமியில் 'இதோ தீர்வு' என்று அறிவித்து தீர்வைப் படிக்கத தொடங்கினார். அவர் முடித்ததும் தன்னுடைய ஆய்வுக்கு வித்திட்டதாக ஜோஸப் லியுவிலியின் (Joseph Liouville) ஆய்வைச் சுட்டிக்காட்டினார். அந்த அறிஞர் குழாமிலேயே இருந்த லியுவிலி இத்தத் தீர்வில் இருக்கும் குறைகளைச் சுட்டிக்காட்டினார். லெமேக்கு நிகழ்ந்தது போல் இவ்வாறு இதுவரை பல உலகப்புகழ் பெற்ற அறிஞர்களது முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந்துள்ளது.

பெர்மாட் தன் குறிப்பில் 'தீர்வு எனக்குத் தெரியும்' என்று குறிப்பிட்டிருப்பதால் உண்மையில் தீர்வு இருக்கும் எனப் பல கணித அறிஞர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் தீர்வைத்தேடி ஆய்வு நடத்தித் தோல்வி அடைந்த வரலாறும் உண்டு.

இன்று மிக ஆற்றல் வாய்ந்த புதிய கணனிகள் இதன் தீர்வை அறிய கையாள்கை செய்து பார்த்தாகி விட்டது.

பெர்மாட் சிக்கலுக்கு தீர்வு காணும் முதல் அறிஞருக்குத் கோதின்சன் நகரில் உள்ள பல்கலைக்கழகம் 10,000 மார்க் தொகை பரிசாக அளிப்பதாக 1908 இல் அறிவித்தது. கி. பி. 2007 வரை நூறு ஆண்டுகளுக்குப் பரிசு அறிவிப்பு இருக்கும் என்று அறிவித்தது.

இன்றைக்கும் ஏராளமான கட்டுரைகள் பல்வேறு பகுதியிலிருந்து கோதின்சன் பல்கலைக்கழகத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. இன்றுவரை இச் சிக்கலுக்குத் தீர்வு கிடைக்கவில்லை. நீங்களும்கூட இதற்குத் தீர்வு காண முயற்சிக்கலாம். பெரும்பாலும் நீங்களும்கூட தோல்வியைச் சந்திக்கக்கூடும். ஆனாலும் என்ன கணித சிக்கலுக்கு தீர்வு காண முயலும் செயலே இன்பமான விடயம் தானே. ஆனால் அப்படி முயற்சி செய்து நீங்கள் வெற்றிபெற்று விட்டால் ...

(நன்றி அணுவிலிருந்து ஆகாயம்வரை)

# மயக்கம்

மயங்கி வீழ்பவர்களை நாம் பார்த்திருக்கிறோம். தாங்கொணாத் துயரம், மிகுந்த அச்சம், பசி, களைப்பு போன்ற பல்வேறு காரணங்களினால் மயக்கம் ஏற்படுகின்றது.

உடலின் உணர்விழந்த நிலையே மயக்கம்.

எங்கள் மூளைக்குப் போதியளவு இரத்தம் செல்வதனாலேயே உடலின் வழமையான செயற்பாடுகள் நடைபெறுகின்றன. போதியளவு இரத்தம் மூளைக்குச் செல்வது தடைப்படுமானால் உடலின் வழமையான செயற்பாடுகளும் தடைப்படுகின்றன.

உடலின் வழமையான செயற்பாடுகள் தடையின்றி நடைபெறுவது உணர்வுநிலை. அவை தடைப்படுவது உணர்விழந்தநிலை.

ஆகவே, மூளைக்குப் போதியளவு இரத்தம் செல்வது தடைப்படுவதனாலேயே மயக்கம் ஏற்படுகின்றது.

ஒருவர் தனக்கு மயக்கம் ஏற்படப்போகின்றதென்பதை உணர்ந்தால் உடனே படுத்துவிட வேண்டும். அல்லது குனிந்து தலையை இரண்டு முழங்கால்களுக்குமிடையில் தாழ்த்தி வைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் மூளைக்குக் கூடுதலான இரத்தம் செல்ல முடியுமென்பதால் மயக்கத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

யாராவது மயங்கி வீழ்ந்துவிட்டால் அவரைப் படுக்க வைத்து அவரது உடைகளைத் தளர்த்திவிட வேண்டும். காலிலும் பார்க்கத் தலை பதிவாக இருக்குமாறு படுக்கவைப்பதே நல்லது. மயக்கம் தெளிந்து எழுந்தவுடன் தேனீர் அல்லது கோப்பி கொடுக்க வேண்டும்.

தலையில் அடிபட்டோ அல்லது காயம் ஏற்பட்டோ மயங்குபவர்களை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

—சிவா—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி ஒன்று! விடை பத்து!

புகழ் பெற்று, சிறந்து விளங்கிய அறிஞரான கசுரத் அலி அவர்களைக் காண ஒரு நாள் பத்து அறிஞர்கள் வந்தனர்.

அவர்களில் ஒருவர் அலியிடம் "நாங்கள் உங்களிடம் ஒரே ஒரு கேள்விதான் கேட்க வந்தோம். எங்கள் பத்துப் பேருக்கும் தனித்தனியே உங்களால் பதில் தர முடியுமா? என்று கேட்டார்.

அதற்கு 'அலி, என்ன கேள்வி? தாராளமாகக் கேளுங்கள்' என்றார்.

## அடிமைக்கு ஏன் கல்வி?

பேரறிஞர் பிளேட்டோவிடம் செல்வன் ஒருவன் வந்தான், "என் மகனுக்குக் கல்வி கற்றுத்தர எவ்வளவு கேட்கிறீர்கள்?" என்று வினவினான்.

"ஐநூறு வெள்ளிகள்" என்றார் பிளேட்டோ.

ஐநூறு வெள்ளிகளா? இதைவிடக் குறைந்த செலவில் ஒரு அடிமையையே விலைக்கு வாங்கி விடலாமே இவ்வளவு தொகையா உங்களுக்குத் தரவேண்டும்?" என்று கேட்டான்.

"நீங்கள் சொன்னது சரிதான். இந்தத் தொகைக்கு ஒரு அடிமையையே வாங்கிக் கொள்ளுங்கள். உங்கள் மகனையும் சேர்த்து இரண்டு அடிமைகள் வீட்டில் இருப்பார்கள்" என்று பதில் தந்தார் பிளேட்டோ,

"'செல்வம், அறிவு இரண்டில் எது சிறந்தது? ஏன்? என்பதுதான் கேள்வி" என்றார் அறிஞர்களுள் ஒருவர்.

அலி முதலாமவரைப் பார்த்து, "அறிவு - தீர்க்க தரிசிகள், ஞானிகள், மகான்கள் இவர்களது பரம்பரைச் சொத்து. ஆனால் செல்வமோ கொடுங்கோலரின் ஆயுதம். ஆகவே அறிவுதான் சிறந்தது" என்றார்.

பிறகு இரண்டாமவரைப் பார்த்து, "உங்களிடம் செல்வம் இருந்தால் நீங்கள் தான் அதைக் காப்பாற்ற வேண்டும். ஆனால் அறிவோ உங்களை எப்போதும் காப்பற்றும். ஆகவே அறிவுதான் சிறந்தது."

அடுத்து மூன்றாமவரைப் பார்த்து, "செல்வனுக்கு எப்போதும் விரோதிகள் அதிகம். ஆனால் அறிஞனுக்கோ நண்பர்கள் அதிகம். ஆகவே அறிவுதான் சிறந்தது."

நான்காமவரைப் பார்த்து "செல்வம் பிறர்க்குக் கொடுக்க - கொடுக்க குறைந்து கொண்டே போகும். ஆனால் கல்வியோ மாறாக அதிகரித்துக் கொண்டே வரும். ஆகவே அறிவுதான் சிறந்தது."

பிறகு ஐந்தாமவரைப் பார்த்து, "அறிவுள்ளவன் எப்போதும் தன் அறிவைப் பிறருக்கு வாரி வழங்கிக் கொண்டிருப்பான். அவனிடம் தாராளத் தன்மை இருக்கும். ஆனால் செல்வனிடம் கஞ்சத்தனந்தான் இருக்கும். ஆகவே அறிவு தான் சிறந்தது."

அடுத்து ஆறாமவரைப் பார்த்து, "செல்வத்தைக் கள்வர்களால் திருடிக்கொண்டு போகமுடியும். ஆனால் அறிவை யாராலும் கவர முடியாது. ஆகவே அறிவு தான் சிறந்தது."

ஏழாமவரைப் பார்த்து, "செல்வம் கால ஓட்டத்தில் அழிந்துவிடும். ஆனால் அறிவைக் கால ஓட்டம் ஒன்றும் செய்துவிட முடியாது. ஆகவே அறிவுதான் சிறந்தது."

எட்டாமவரைப் பார்த்து, "செல்வத்திற்கு எப்போதும் எல்லையுண்டு; அளவுண்டு; கணக்கு உண்டு. அறிவுக்கோ அப்படிப்பட்ட எல்லைகள் எதுவும் இடையாது ஆகவே அறிவுதான் சிறந்தது."

பிறகு ஒன்பதாமவரைப் பார்த்து, "செல்வம் உள்ளத்தில் ஒளியைப் போக்கி அதை இருளடையச் செய்கிறது. விரிந்த மனப்பான்மையைக் குறுக்கலாக்குகிறது. ஆனால் அறிவோ இருண்ட உள்ளத்தில் ஒளி பாய்ச்சி அதை விசாலப்படுத்துகிறது."

கடைசியாகப் பத்தாமவரைப் பார்த்து, "செல்வம் உள்ளச் செருக்கையும் ஆணவத்தையும் ஏற்படுத்துகிறது. அதனால் தானே கடவுள் என்று உரிமைகொண்டாடும் நிலைக்கு மனிதனைக் கீழாக்கி விடுகிறது. ஆனால் அறிவோ 'இறைவனே நாங்கள் உனது அடிமைகள்' என்றபணிவையும் பண்பாட்டையும் வளர்த்து சகோதரத்துவ நல்வாழ்வைத் தருகிறது" என்றார்.

## கற்கத் தொடங்கும் பருவம்

அமெரிக்க நாட்டில் புகழ் பெற்ற கல்வியாளராக வெலண்ட் பார்க்கர் விளங்கினார். அவர் ஒரு சமயம் கல்வி என்னும் தலைப்பில் சொற்பொழிவு செய்தார்.

அக்கூட்டத்திற்கு வந்திருந்த ஒரு பெண்மணி அவரைப் பார்த்து 'என் குழந்தைக்கு நான் எந்த வயதிலிருந்து கல்வி கற்பிக்கத் தொடங்க வேண்டும்?" என்று வினவினாள்.

அதற்கு அவர், "அம்மணி தங்களுக்குக் குழந்தை எப்பொழுது பிறக்கப்போகிறது?" என்று கேட்டார்.

உடனே அவள் "என் குழந்தைக்கு இப்பொழுது ஐந்து வயதாகிறது" என்று பதில் தந்தாள்.

"அப்படியென்றால் நீங்கள் ஐந்தாண்டுகளை வீணாக்கிவிட்டீர்கள். இங்கே உரையாடி நேரத்தை மேலும் வீணாக்காமல் உடனே வீட்டிற்குச் செல்லுங்கள்" என்றார் பார்க்கர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எயிட்ஸ்" நோயிலிருந்து தப்ப வள்ளுவன் வகுத்த மருந்து

—முத்து விஜயராகவன்—

என்ன அதிசயிக்கிறீர்களா? அதிசயம் தான் ஆனால் உண்மை. எமது வள்ளுவன் சிறந்த புலவன் மட்டுமல்ல சிறந்த வைத்தியனுங்கூட பிற் காலத்தில் தோன்றி மனித இனத்துக்கே உலைவைக்கும் கொடிய நோய்களை, ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்பே தன் தீர்க்கதரிசனப் பார்வையில் கண்டு அவற்றிற் கான மருந்துகளையும் தெட்டத் தெளிவாக எழுதி வைத்துவிட்டுப் போன வைத்தியனவன்.

வள்ளுவன் மருந்து கண்ட நோய்களில் ஒன்று தான் எயிட்ஸ். இது மனித இனத்தின் பொதுவிரோதி. விஞ்ஞானிகளின் விளக்கத்திற்கும் மருத்துவர்களின் மருந்திற்கும் அப்பாற்பட்ட ஒரு கொடியநோய்.

ஆனால் எமது செந்நாப்போதர் வள்ளுவரால் அந்நோய்க்கு அருமையானதொரு மருந்தைச் சொல்ல முடிந்தது. தன் அனுபவத்தில் கண்ட அரியதொரு மூலிகையை சாறுபிழிந்து மருந்து தயாரிக்க முடிந்தது. அம் மருந்திற்கு தேன் கலந்து, பால் கலந்து, தீஞ்சொற்சுவை கலந்து தன்குறட்பாவினால் எமக்கு ஊட்டவும் முடிந்தது.

எப்படி இது சாத்தியமானது? எயிட்ஸ் நோயிலி ருந்து தப்ப எப்படி வள்ளுவனால் ஒரு மருந்து வகுக்க முடிந்தது? வள்ளுவன் என்னும் புலவனால் எப்படி ஒரு வைத்தியனாக முடிந்தது? ஓ! .. அவன் காலத்தை வென்ற கவிபடைத்தவனாயிற்றே. அதனால் தான் போலும் ஏனையவர்கள் விட்டுவிட்ட துறைகளையும் அவனால் தொட்டுப்பார்த்து, தட்டிக்கேட்டு, சுட்டிக் காட்ட முடிந்ததோ?

இன்றைய கவிஞரெல்லாம் இந்நோயின் கொடுமை களைக் கண்டு கொதித்து

"வேலையற்றுக் கிடக்கும்
இளவாலைப் பருவத்தில்
காளையரும் காரிகையும்
நோய் காவித்திரிகிறார்கள்"
"எயிட்ஸ் என்னும் நாலெழுத்தால்
நானிலத்தைக் குலைக்கிறார்கள்"

என்றெல்லாம் குமுறிவிட்டு நிற்க. எமது வள்ளு வனோ பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே, குமுறும் எரிமலைக்கு மருந்து சொல்லிவிட்டுப் போனானே. என்னே அவன் தீர்க்கதரிசனம். ஓ ..... அவன் தெய் வப் புலவனல்லவா.

எனினும் வள்ளுவனுக்கிருக்கும் முக்கியத்துவத்தைவிட அவன் வகுத்த மருந்தே பன்மடங்கு அதிக முக்கியத் துவம் பெறுகின்றது. இதை முழுமை யாகப் புரிந்துகொள்ள வேண்டுமெனில் எயிட்ஸ் நோயைப்பற்றி சிறிதேனும் அறிந்திருப்பது அவசியம். ஆதலால் முதலில் அதைப் பார்ப்போம்.

❀ ❀ ❀

1981 ஆம் ஆண்டு, நாகரீகத்தின் உச்சிக் குச் சென்றிருப்பவர்கள் தாமெனக் கூறிக்கொண்டு அநாகரீக வாழ்வு வாழ்பவர்களின் அமெரிக்காவிலே இந்நோய் முதன்முதலில் கண்டு பிடிக்கப்பட்டது.

எயிட்ஸ். என்ற இவ் ஆங்கிலப் பதச்சுருக்கத்தினை விஞ்ஞானத் தமிழில் 'தொற்றிக்கொண்ட நீர்பீடனக் குறைபாட்டு நோய்த்தொகுதி' எனக்கூறலாம். இதே போல் இந்நோயை உண்டாக்கும் எச். ஐ. வி. (HIV) இனை 'மனித நீர்பீடனக் குறைபாட்டு வைரஸ்' என லாம். இவையெல்லாம் அவற்றின் செயற்பாடுகளை கருத்திற் கொண்டு அவற்றிற்கு சூட்டப்பட்ட காரணப் பெயர்களாகும்.

## எங்கும் எதிலும் கல்வி.

வகுப்பு நடத்திக் கொண்டிருந்த பேராசிரியர் ஒருவர் மாணவர்களைப் பார்த்து "நாம் பார்க்கும் பொருள்களில் இருந்தெல்லாம் ஏதேனும் ஒருபாடத் தைப் பெறலாம்" என்றார்.

"ரயில் வண்டியிலிருந்து நாம் என்னபாடம் கற் றுக் கொள்ள முடியும்? என்றான் ஒரு மாணவன்.

"காலதாமதம் செய்தால் நினைத்ததை அடைய முடியாது" என்றார் பேராசிரியர்.

"தந்தியிலிருந்து" என்றான் அடுத்த மாணவன்.

"ஒவ்வொரு சொல்லுக்கும் மதிப்புண்டு என் பதை"என்றார் பேராசிரியர்.

எமது உடலானது எம் குருதியில் காணப்படும் வெண்குழியங்களினால் இயற்கையான பாதுகாப்பைப் பெற்றுள்ளது. இவ் வெண்குழியங்கள் சிறுமணியுள் ளவை, சிறுமணியற்றவை என இரண்டாகப் பாகுபடுத் தப்படும். இங்கு குறிப்பிடப்படும் சிறுமணியற்ற வெண் குழியங்கள் மேலும் ஒற்றைக்குழியம் (Monocyte), நிண ணீர்க்குழியம் (Lymphocyte) என இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நிணனீர்க் குழியங்கள் எமது உடலில் ஒரு முக்கியமான தொழிலை மேற்கொள்கின்றன. 'பிற பொருள் எதிரிகளை' (Antibodies) சுரந்து உடலுக்கு 'முதலான பாதுகாப்பை' (1 st Defence of the body) இவை வழங்குகின்றன; இப்பிறபொருள் எதிரிகள் உடலில் நுளையும் நோய்க்கிருமிகளுடன் போராடி கிருமிகளை அழித்து நோயைக் குணமாக்குகின்றன. இந் நிணனீர்க் குழியங்களினால் எமது உடலில் நீர்ப்பீடனம் (Immune system) உண்டாகின்றது. இவை அழையா விருந்தாளிகளாக உடலில் நுழையும் வைரசுகளை அடையாளம் கண்டு, உடலின் பாதுகாப்பு பொறிமுறைகளை ஒன்றுகூட்டி எதிர்த்தாக்குதல் செய்யும் தொழிலை மேற்கொளகின்றன என மொத்தமாகக் கூறலாம்.

## ஏன் முடியாது?

அண்மையில்தான் பாடல் எழுதத் தொடங்கிய ஒருவன் பெரும்புலவராகிய மொசார்ட்டைச் சந்தித்தான்.

''ஐயா! என் புலமையை வளர்த்துக் கொள்ள ஏதேனும் அறிவுரை சொல்லுங்கள்'' என்று பணிவாகக்கேட்டான்.

அதற்கு மொசார்ட் ''முதலில் சின்னப்பாடல் எழுதிப் பழகுங்கள்'' என்றார்.

இதைக் கேட்ட அவன் ''ஐயா! நீங்கள்மட்டும் இளம் வயதிலேயே நீண்ட பாடல்களையும் காப்பியங்களையும் எழுதியிருக்கிறீர்கள். ஆனால் என்னிடம் சிறு சிறு பாடல்களை முதலில் எழுது என்று அறிவுரை வழங்குகிறீர்களே. இது நியாயமா?'' என்று கேட்டான்.

''ஆமாம். நீ என்னைப் பற்றிக் கூறுவது சரிதான். ஆனால் நான் யாரிடமும் சென்று எப்ப பாடல் எழுதவேண்டும் என்று கேட்டதில்லையே'' என்று பதில்தந்தார், மொசார்ட்.

ஆனால் எயிட்ஸ் வைரசோ மேற்கூறிய செயன்முறைகளைஎல்லாம் தோற்கடித்து விடுகின்றது. எயிட்ஸ் நோய்க்கு எதிரான சில பிறபொருள் எதிரிகள் எமது உடலில் உற்பத்தியாகிறபோதும், அவை எயிட்ஸ் வைரஸ் பெருகுவதைத் தடுக்கக் கூடியனவாக இருப்பதில்லை. இதனால் எயிட்ஸ் கிருமி குருதியின் மூலம் உடலின் பல்வேறு பாகங்களுக்கும் பரவுகின்றது. இவ்வாறு பரவும் வைரஸ் கிருமிகள் சும்மா இருப்பதில்லை. இவை தாமிருக்கும் கலத்தில் பெருகிப், பின் அதை அழித்து வெளியேறுகிறது. வெளியேறிய வைரசுகள் மேலும் பல கலங்களைத் தாக்கிஅழித்து பல்கிப் பெருகுகின்றன. பெருகிய இவ் வைரசுகள் நிணனீர்க் குழியங்களைத் தாக்குகின்றன. இதனால் இறுதியில் நோயாளியின் நீர்ப்பீடனத் தொகுதி பாதிக்கப்பட்டு செயலிழக்க ஆரம்பிக்கின்றது.

இதுவே எயிட்ஸ் நோயின் கொடுமைகளில் உச்சமானதாகும். உடலானது கிருமிகளுக்கு எதிராகப் போராடும் சக்தியை இழக்கின்றது. இந்நிலையில் தோன்றும் சாதாரண தொற்றுநோய்களில் இருந்தே மீளமுடியாமல் இந்நோயாளியின் உடல் சிக்கிச்சீரழிகின்றது. இறுதியில் எயிட்ஸ் நோயாளி அறுதியாக இறக்கவும் நேரிடுகிறது.

இவ்வாறு எயிட்ஸ் நோயின் கொடியதன்மைகளை மருத்துவர்களும், விஞ்ஞானிகளும் தொடர்ச்சியாக அவதானித்தனர். இந்நிலை இனியும் தொடருமாயின் இன்னும் சிலகாலத்திலேயே மனித இனம் முழுவதும் அழிந்துவிடக்கூடும் என அவர்கள் அஞ்சினர். அதனால் எயிட்ஸ் நோய்க்கு மருந்துகாண அவர்கள் பலவழிகளிலும் அயராது முயற்சித்தனர்.

(மிகுதி அடுத்த இதழில்)

## ஒன்று நடக்கும்! ஒன்று நடக்காது!

ரெட்டியார் மிகவும் இரக்க குணம் படைத்தவர். ஒரு நாள், ஏழை ஒருவன் அவரிடம் வந்து, ''ஐயா என் வீட்டில் தெய்வத்திற்குப் படைக்க வேண்டும். தாங்கள்தாம் அரசரிடம் சொல்லி, 'எனக்கு ஓர் ஆடும் ஒரு மூட்டை அரிசியும் கிடைக்க அருள் செய்ய வேண்டும்'' என்று வேண்டினான்.

உடனே ரெட்டியார், "நீ கேட்டதில் ஒன்றுதான் நடக்கும்; இன்னொன்று நடக்காது'' என்றார்.

இதைக்கேட்ட ஏழை, 'நாம் கேட்ட இரண்டில் ஒன்றுதான் கிடைக்கும்போல இருக்கிறதே' என்று வருந்தினான்.

''ஐயா ; எப்படியாவது இரண்டும் எனக்குக் கிடைக்க நீங்கள் உதவவேண்டும்'' என்று கெஞ்சினான்.

அந்த ஏழையின் வாடிய முகத்தைக் கண்டு. ''நான் என்ன சொல்லிவிட்டேன். நீ கேட்ட இரண்டில் ஆடுதான் நடக்கும். அரிசி நடக்காது. இதைத்தானே சொன்னேன், நீ ஏன் வருந்த வேண்டும்'' என்றார்.

ரெட்டியாரின் சொல்லாற்றலைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தான் அந்த ஏழை.

அவரும் தாம் சொன்னது போலவே அரசரிடம் அவன் கேட்டவற்றைப் பரிசாக வாங்கித் தந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னூல் புகட்டும் அறிவுரை

—நாக. பத்மநாதன்—

நல்ல மாணாக்கர் எவ்விதம் இருக்க வேண்டும்? எவ்விதம் இருப்பர்? அதுபோல இடை மாணாக்கர், கடை மாணாக்கர் என்றிருப்போர் விடும் தவறுகள் யாவை?

இவ்விதம் எம் வாழ்வுக்கு வேண்டிய வழிகாட்டலை தொல்காப்பியம் மட்டுமல்லாது அதன் பின் வந்த நன்னூலும் தந்து உதவுகிறது. அதன் ஆசிரியர் பவணந்தி முனிவர். அவர் தரும் உதாரணங்களைப் பார்ப்போம்.

அன்னப்பட்சி நீரையும் பாலையும் வேறு பிரித்துப் பாலை மாத்திரம் குடிக்கின்றதாம். அதுபோல முதன் மாணாக்கன் குணத்தையும் குற்றத்தையும் வேறு பிரித்து குணத்தை மாத்திரம் கொள்ளுகிறான். அதாவது நல்லதை ஏற்கும் இயல்பு அவனுடையது. இன்னொரு உதாரணத்தையும் கொள்ளலாம். பசு நல்ல புல்லைக் கண்ட இடத்து அதனை விரைவாக மேய்ந்து பின்பு ஓரிடத்திற் போயிருந்து சிறிது சிறிதாக வாயில் வருவித்துக் கொண்டு அவ்விதம் இரை மீட்டுத் தின்னும். முதன் மாணாக்கனும் அதுபோலவே தனக்குரிய கல்வி கிட்டும் போது அதனை விரைந்து ஆவலுடன் பெற்று பின்னர் ஓரிடம் போயிருந்து தான் பெற்றதை நினைவிற் கொண்டு வந்து சிந்தித்து நிறைந்த பலன் பெறுகிறான்.

இதனிலும் ஒரு படி குறைந்த உதாரணத்தை இனிப் பார்ப்போம். உழவர் எவ்வளவு வருந்தி, உழுது உரமூட்டி நீர் பாச்சுகிறார்களோ அதற்கேற்பவே மண் பலன் தருகிறது. உழவோ உரமோ குறைந்தால் நிலம் தரும் பயனும் குறைகிறது. சில மாணவரும் இவ்விதம்தான் இருப்பதுண்டு. ஆசிரியர் வருந்திப் படிப்பிக்கும் அளவுக்கு மட்டுமே இந்த மாணவரின் உயர்வும் இருக்கும். இதற்கு வேறொரு உதாரணமும் காட்டப்படுகிறது. கிளி பேசப் பழகுகிறது. ஆனால் எந்த அளவு? அது சொல்லிக் கொடுக்கும் சொற்களை மட்டுமே சொல்லும். அதற்கு அப்பால் இல்லை! இவை நடுத்தர (இடை) மாணாக்கருக்கு உதாரணம்.

இன்னும் சில உதாரணங்களைப் பார்ப்போம். அவை வேதனை தருபவை. ஓட்டைக்குடம் வார்க்கப்படும் நீரை வைத்திருக்காது ஓடவிட்டு விடுகிறது! மறதிக்குரிய மாணாக்கரும் இவ்விதம் தாம் பெற்ற பொருளை மறந்து விடுகின்றனர்! ஆடு ஒரு செடி தழைத்திருந்தாலும் அதில் தரித்திராது. அங்கும் இங்கும் ஓடிக்கடிக்கும். இதுபோலவே கடைமாணாக்கர் பல இடம் ஓடுவார்களாம். ஓரிடத்தில் தரித்துநின்று இவர்கள் பயன் பெறுவது கடினமாம். இன்னொரு எடுத்துக்காட்டு எருமை அது குளத்து நீரைக் குடிக்கப் போகினும் அதனைக் கலக்கிச் சேறாக்காது விடாது. இவ்வித குழப்ப குணம் கூடாது. அது உரிய பயனைக் குறைக்கும். மாணாக்கர் இதனை மனதிற் கொள்ளவேண்டும். இன்னுமோர் உதாரணத்தையும் பார்ப்போமா? அதனை நெய்யரி எனும் பன்னாடை அல்லது அரிதட்டு காட்டி நிற்கிறது. இது தேன் முதலியவற்றைக் கீழே ஓடவிட்டு தேவையற்றதைத் தான் ஏற்று நிற்கிறது. நாமும் நல்ல பொருளை ஓடவிட்டு தேவையற்றதைத் தாங்கி நிற்க வேண்டுமா? கடை மாணாக்கராக வேண்டுமா? வேண்டாம், முன் சொன்ன முதன் மாணாக்கராவோம். இதற்குரிய நன்நூற் சூத்திரம் வருமாறு:-

அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி
அன்னர் தலைஇடை கடை மாணாக்கர்.

## பாலும் கசக்கவில்லை.

புலவர் ஒருவர் கடும் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்தார். உறவினர்களும் நண்பர்களும் அவரைச் சூழ்ந்து நின்றார்கள்;

புலவரால் பால் குடிக்க முடியாது என்பதால் பாலில் துணியைத் தோய்த்து அவர் வாயில் வைத்து மெதுவாகப் பிழிந்தார் ஒருவர்.

ஆனால் புலவரோ பாலைக் குடிக்காமல் அதைதுப்பிவிட்டார்.

அருகிலிருந்த அவர் நண்பர், ''என்ன பால் கசக்கிறதா?'' என்று அன்புடன் கேட்டார்.

புலவரோ மிக மெல்லிய குரலில், ''பாலும் கசக்கவில்லை, துணியும் கசக்கவில்லை'' என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாடு இன்னொரு நாட்டையோ அல்லது ஒரு நாட்டிலுள்ள ஒரு இனம் அந்த நாட்டில் உள்ள இன்னொரு இனத்தையோ கைப்பற்றி அடக்கியாள எத்தனிக்கும் போது வன்கவர்வுக்குள்ளாகிய நாட்டில் அல்லது இனத்திலிருந்து விடுதலை வேட்கையோடு இளைஞர்களும் மங்கையரும் கிழர்ந்தெழுந்து நாட்டைக்காப்பதும் இனத்தை விடுவிப்பதும் காலம் காலமாக நடைபெற்றுவரும் நிகழ்ச்சி. இந்த வரிசையில் தான் பிரான்சு நாட்டில் 1412ல் பிறந்த 'ஜோன் ஆப் ஆர்க்' என்ற வீராங்கனையும் தோன்றினாள்.

பிரான்சு மிகப்பழமையான நாடு. கலை, இலக்கியம், பழக்க வழக்கங்கள், உன்னத மனித உணர்ச்சியாகியவற்றை உலகிற்கு அளித்த நாடு. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கோட்பாடுகளை முன்வைத்த நாடு, புரட்சியின் குழந்தை என்று அழைக்கப்படும் நெப்போலியனைத் தந்த நாடு. அந்த நாடு சிதைந்து சீரழிந்து வெளியாரின் வன்கவர்வுக்கு ஆளாகியிருந்தது என்று

# விடுதலை வீராங்கனை
# ஜோன் ஆப் ஆர்க்

நினைத்துப்பார்ப்பதும் கூட கஷ்டமானதுதான். ஆனால் மன்னர்களின் நாடுபிடிக்கும் ஆசையினால் பிரான்சுநாடு 1400களில் பிரிட்டனின் வன்கவர்வுக்கு உள்ளாகியிருந்தது. அதன் வடபகுதிகளை ஏற்கனவே கைப்பற்றியிருந்த ஆங்கிலேயர்கள் தென்பகுதிகளையும் கைப்பற்றும் நோக்கோடு தமது படைகளைத் தயாராக்கி அதற்கேதுவாக கேந்திரநகரமான ஓர்லியன்சை இணைத்திருந்த பாலத்தையும் தகர்த்து எறிந்து அந்நகரை முற்றுகையிட்டார்கள்.

இம்முற்றுகை 1428 இல் நடைபெற்றது. அப்போது ஜோன் ஆப் ஆர்க்கிற்கு வயது பதினேழு. டாம்ரெமி என்ற ஊரில் பயிரிட்டும் ஆடுமாடுகளை வளர்த்தும் வாழ்ந்து வந்த சாதாரண ஒரு குடியானவனின் மகள்தான் ஜோன் ஆப் ஆர்க். ஜோன் ஒரு நாள் கூட பள்ளிக்குப் போகவில்லை. வீட்டிலும் படிக்கவில்லை. சிறந்த நுண்ணறிவும் கலங்காத மன உறுதியும் கனிந்த தேசபக்தியும் அவளது உடலோடு போட்டியிட்டு வளர்ந்தன. பதின்மூன்றாம் வயதிலே அவள் பிரான்சுநாட்டை ஆங்கிலேயரிடம் இருந்து மீட்பது பற்றிக் கனவு காணத் தொடங்கினாள்.

அக்காலகட்டத்தில் ஐரோப்பா முழுவதும் ஆண்டவனிலும், மதத்திலும், மதப்பழக்க வழக்கங்களிலும் மிகவும் அமிழ்ந்திருந்தது. அதன்காரணத்தால் எதற்கும் ஆண்டவனை வேண்டுவதே அக்கால மரபும் பாரம்பரியமுமாகும். ஜோன் ஆப் ஆர்க்கும் இதற்கு விதிவிலக்கல்ல. அவளின் சுதந்திர உணர்ச்சிப் பெருக்கு தனக்குநாட்டைமீட்டெடுக்கும் கடமையை ஆண்டவன் அளித்துள்ளார் என்ற மனப்பான்மை உருவாக்கியது.

அக்காலத்தில் மத நம்பிக்கையில் பிரான்சு மக்கள் அதிகம் மூழ்கியிருந்ததால் ஜோன் கடவுளின் அருளால் ஆட்கொள்ளப்பட்டவள் என்று எண்ணினார்கள். அது எதுவிதமிருந்தாலும் ஜோன் நாட்டுப்பற்றால் உந்தப்பெற்று தனது அரசனிடம் சென்று பிரான்சுப்படையைத் தான்வழிநடத்தி வெற்றி பெற்றுத்தருவதற்கு ஒப்புதல் கேட்டாள். முதலில் மன்னனும் ஏனைய படைத்தலை



வர்களும் இதற்கு ஒப்பவில்லை. அவளைப் பைத்தியக்காரி என்றும் மாயக்காரியென்றும் கேலி செய்தார்கள். ஜோனோ விடாப்பிடியாக இருந்து சிறிது காலத்துக்குள் படைப்பயிற்சியையும் பெற்றாள். மக்கள் ஜோனின் தணியாத தாயகப்பற்றைக்கண்டு அவள் மீது நம்பிக்கை கொண்டார்கள். மதகுருமார் ஜோனின் தாய் நாட்டுப்பற்றை தமது மதத்திற்கு வாய்ப்பான விடயமாக மாற்றி அவளை ஆதரித்தனர். அரசனும் படை மேலாளரும் முதலில் அவளின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாமைக்கு ஆண் ஆதிக்க வெறிதான் காரணம். மக்களும் மதகுருமாரும் ஜோனை ஆதரிப்பதைக் கண்ட மன்னனும் படை மேலாளர்களும் மனம் மாறினார்கள். அவளின் கோரிக்கைக்குச் செவிசாய்த்தார்கள். அவளின் கட்டளைகளை அரை மனத்துடன்தான் ஏற்றார்கள். இதுவும் ஆண் ஆதிக்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வெளிப்பாடாகும். மக்களும் சாதாரண படையினரும் அவளை முழுவதாக ஏற்றுக் கொண்டார்கள், கட்டளைகளுக்குப் பணிந்தார்கள். குறைந்த காலப் பயிற்சிதான் பெற்றிருந்தாலும் ஆயுதங்களைக் கையாள்வதில் ஜோன் மிகவும் திறமையைக் காட்டினாள். இந்நிலையில் தான் ஆங்கிலேயர்களால் முற்றுகையிடப்பட்டிருந்த ஓர்லியன்ஸ் நகருக்கு தன் படைகளை நடத்திச் சென்றாள்.

ஜோன் ஓர்லியன்ஸ் நகருக்குப் படைகளை இட்டுவந்ததை அறிந்ததுமே ஆங்கிலேயர்களுக்குக் கிலிபிடித்துவிட்டது. மனோபலத்தை இழந்தார்கள். அவளின பிரசன்னமே அவர்களைக் கெடிகலங்கச் செய்தது. எடுத்ததற்கெல்லாம் அநாயாசமாக பிரான்சுப்படைகளைத் தாக்கும் ஆங்கிலேயர்கள் நகருக்கு வந்த புதிய பிரஞ்சுப்படை, தளபாடங்கள், உணவுப் பொருடகள் முதலியவற்றை ஜோன்தானே நேரே சென்று கூட்டிவந்தபோது அவளைத்தாக்காது பேசா மடந்தைகளாக இருந்தார்கள். இதற்கெல்லாம் ஆங்கில தளபதி ஒரு வீரமற்றவனுமல்ல, அவன் பெயர் சேர்விலலியம் கிளாடஸ்டேல. ஆனால் அவனுக்குக்கீழ் இருந்தது ஒரு ஆக்கிரமிப்புப் படை. ஜோனின் படையோ விடுதலை வேட்கைகொண்ட தேசாபிமானிகள். இதுதான் வேறுபாடு.

ஓர்லியன்சில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக போர் தொடங்குவதற்கு முன தனவாயாலும் வேறு வழிகளாலும அவர்களைத் திரும்பிச் செலலுமாறு தார்மீக முறையில் ஜோன் எச்சரிததாள். அவர்கள் கேட்காத நிலை வீராவேசத்தோடு போா நடததினாள். அவள் தலைபடையினரை "துணிவுடன் ஆங்கிலேயரிடையே ஊடபுகுந்து போராடுங்கள்" என்று குரல் கொடுத்துத் தானும அவ்விதமே செய்தாள். ஆங்கிலேயரும் அம்பு மழை பொழிந்தனர். குண்டுகளைச் சொரிந்தனர். கூரிய வேல்களை எறிந்தனர். வெடிகுண்டுகளை வீசினர். போர்க்களம் முழுவதும் புகைசூண்டது. பிணங்கள் குவிநதன. ஜோன் ஆழ்ந்த அகழியில குதிததுப் போர் புரிந்தாள். செயின்றலூப் என்ற அரண சரிந்தது. அது அவளின் முதலவெற்றி. ஆனால் இன்னும ஆங்கிலேயர்கள் பெரும அரணகளில் இருந்தார்கள். மூன்றாவதுநாள் ஆகஸ்ரின் செயின்ற் ஜீன், டி பிளான்க் ஆகிய இரு அரண்களைத்தாக்க படகுகள் மூலம் தன் படைகளை இட்டுச்சென்றாள். அவளுக்கு அப்போரில் காலில காயம ஏற்பட்டாலும் அரணகள் இரண்டும் அவள் கைவசமாகின. பலநூற்றுக்கணக்கான ஆங்கிலேயர்கள் கொலலப்பட்டார்கள். அப்பிடியிருந்தும் ஆங்கிலேயர்களின் முக்கிய அரணான ரூறெலிஸ் மிகவும் பலம் வாய்ந்ததாகவும் உயரமானதாகவும் உட்புகமுடியாததாகவும் ஐந்நூறு வீரர்களைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது. அதைக் கைப்பற்றினால் தான் வெறறி. அடுத்த நாள் இவ்வரணை நோககி ஜோனின் படைசென்றது. முதல ஏணியை ஜோனே வைத்து ஏறினாள். ஆனால் ஒரு ஆங்கிலேயன் மேலிருந்து விடுத்த அம்பு அவளின் கழுத்துக்கும் தோளிற்குமிடையில் தாக்கிக் காயப்படுத்தியது. ஆங்கிலேயர்கள் அவளைப்பிடிக்க முயன்றபோதும் ஜோனின் வீரர்கள் அவளைக் காப்பாற்றி தூக்கிச் சென்றார்கள். ஜோன் சளைக்கவில்லை. அம்பைத் தன்கையாலேயே பிடுங்கி எறிந்தாள். காயத்துக்கு மருந்து கட்டப்பட்டதும் ஜோன் தன் படையினரை உற்சாகப்படுத்தித் திரும்பவும் தாக்குதலுக்குச் சென்றாள். அவளின் வருகை போர்முனையில் நின்று சமர்செய்து கொண்டிருந்த பிரெஞ்சுப் படையினருக்கு மேலும் வீரத்தையூட்டியது. ஆங்கிலேயர்கள் கிலிகொண்டார்கள். முந்நூறு ஆங்கிலேயர்கள் அவர்களின் தளபதி சேர்வில்லியம் கிளாட்ஸ்டேல் உட்பட கொல்லப்பட்டார்கள். ஜோன் வெற்றிவாகை சூடினாள். பிரான்சு நாட்டில் அன்று வரை காணாத தோல்வியை ஆங்கிலேயர்கள் கண்டனர். தங்களின் ஏனைய அரண்களையும் விட்டு விலகிப் பின்வாங்கினார்கள். வெற்றிக்களிப்பில் மூழ்கிய ஜோன் தனது அரசன் சார்ள்சை ஓர்லியன்சிலுள்ள ரீம்சு நகரில் முடிசூடும் வண்ணம் வேண்டினாள். முதலில் ஆங்கிலேயருககுப் பயந்து அந்நகருக்குச் செல்ல மறுத்த அரசன் அவளின் விடாப்பிடியால் அங்கு சென்று முடிசூட்டப்பட்டான்.

தன் மண்மீட்புப்பணியில் வெற்றிகண்ட ஜோன் தன்னைத் தன் கிராமத்துக்குச் செல்ல ஒப்புதல் தருமாறு அரசனைக் கேட்டாள். தங்கள் சுயநலங்களை ஜோன் மூலம் நிறைவு செய்யவிரும்பிய அரசனும் பிரதானிகளும் அவளைத் தொடர்ந்து சேவையில் இருக்குமாறு பணித்தார்கள். அவள் தொடர்ந்தும் படையில் இருந்து அரசனுக்குப் பல வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்தாள். இருந்தும் 1429 மே 24 இல் கொம்பெயின் கோட்டையை முற்றுகையிட்டிருந்த பேர் கண்டியன் படையினருடான மோதலில் ஜோன் எதிரிகளிடம் கைதானாள். விரும்பியிருந்தால் பிரான்சு மன்னன் அவளைப்பணம் கொடுத்து மீட்டிருக்கலாம். மக்கள் மத்தியில் ஜோன் செல்வாக்குப் பெற்றிநந்தது மன்னனின் பொறாமையை தூண்டிவிட்டிருந்தமையால் நன்றிகெட்ட சார்ள்ஸ் மன்னன் அவளைப் பணம் கொடுத்து மீட்கவில்லை. ஆகவே பெருந்தொகைப் பணத்துக்காக ஜோன் ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டாள். மன்னர்களுக்கு மண்பற்றும் கிடையாது, மக்கள் பற்றும் கிடையாது. அவர்களுக்குத் தம் பற்றுத்தான் அதாவது அவர்களின் சுயநலத்தின் மீதுதான் பற்று என்பதற்கு இது ஒரு உதாரணம்.

ஆங்கிலேயர்கள் ஜோன் ஆப் ஆர்க்கை பல சித்திரவதைகளுக்கு உள்ளாக்கினார்கள். மதகுருமார்களைக் கொண்ட நீதிமன்றின் முன்னாள் மாயக்காரி சூனியக்காரி என்ற குற்றச்சாட்டின் பேரில் அவள் விசாரணைக்குள்ளாக்கப்பட்டாள். அவள் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்களை மறுத்தாள். தான் ஆண்டவனின் கட்டளையைத் தான் நிறைவேற்றியதாகக் கூறினாள். அவளிடம் ஆண்டவன் பிரான்சு மக்களை மாத்திரம்தான் நேசிக்கிறாரா? ஆங்கில மக்களை அவர் நேசிக்கவில்லையா? என்று கேட்கப்பட்ட

(17ம் பக்கம் பார்க்க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் மண்;
# எங்கள் எழுத்தாளர்—
# எங்கள் நூல்கள்!

— அ. யேசுராசா

தமிழ்த் தேசிய இனத்தின் தன்னாட்சி உரிமைக் கான போராட்டம் தீவிரமடைந்த காலகட்டத்தில் வாழ்கிறோம். ஒரு தேசிய இனம் என்பதை வரையறுக் கும் முக்கிய அலகுகளில் ஒன்றாக, அதன் தனித் துவமான பண்பாடு அமைகிறது. பண்பாட்டின் முக் கிய அம்சங்களில் ஒன்றாக, அதன் பாரம்பரிய - புதிய இலக்கியங்கள் உள்ளன. அண்மைய காலஉணர்வு வெளிப்படுவதனால் புதிய இலக்கியங்களே கூடுதலான கவனிப்பைப் பெறுவனவாகவுள்ளன.

மக்களின் வாழ்வு நிலைகள், நம்பிக்கைகள், ஆசா பாசங்கள், பிரச்சினைகள், ஒடுக்குமுறைகள் – போராட் டங்கள், மொழிப் பயன்பாடு போன்றவை 'இரத் தமும் சதையுமாக' இலக்கியங்களில் வெளிப்பாடு கொள்கின்றன. இந்தியத் தமிழகத்திலுள்ள தமிழரி லிருந்து தமிழீழத் தமிழர், பல்வேறு அம்சங்களில் வேறுபட்டு – தனித்துவங் கொண்டுள்ளனர். எனவே, எம்மை வெளிப்படுத்தும் உயிர்ப்புடைய இலக்கியங்கள் எம்மவரால்தான் - தமிழீழ மண்ணில்தான் படைக் கப்பட முடியும்; எமது மண்ணின் மணத்தையும், காற் றின் அசைவையும், எமது மக்களின் இதயத் துடிப்புக் களையும் இந்த மண்ணைச் சேர்ந்தவர்களினால்தான் வெளிப்படுத்த முடியும்.

இந்த நூற்றாண்டின் முப்பதாம் ஆண்டுகளின் விழிப்புணர்வுடன் உருவாகத் தொடங்கிய ஈழத்தின் நவீனத் தமிழ் இலக்கியம், நாற்பதுகளிலும் அறுபது களிலும் எழுபதுகளிலும் மேலும் தீவிரச் செயற் பாட்டைப் பெற்றது; இற்றைவரை பல்நூற்றுக் கணக்கான - சிறுகதை, கவிதை, நாவல், விமர்சன நூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எனினும் எமது மக்கள் மத்தியில் இவை பரவலான கவனிப்பைப் பெற்றிருக்கின்றனவென்றோ, எமது எழுத்தாளர் களை - கவிஞர்களை - மக்கள் பரவலாக அறிந்திருக் கிறார்களென்றோ கூற முடியாது. எமது மாநகர சபை - நகரசபை - சனசமூகநிலைய - பாடசாலை நூலகங்கள் பெரும்பாலானவற்றில் ஈழத்து நூல் களைக் காண முடியாது. சில நூலகங்களில் ஓரளவு நூல்களைக் காணலாமாயினும், அவை பலராலும் விருப்புடன் பாவிக்கப்படாதவையாக - புறக்கணிக்கப் பட்டவையாக - இருக்கும் அவல நிலையை அவதானிக் கலாம்.

எமது வாசகர்களில் பலருக்கு தமிழகத்தைச் சேர்ந்த ராஜேஷ் குமார், ராஜேந்திர குமார், புஷ்பா தங்கத்துரை, சுஜாதா, பாலகுமாரன், சிவ சங்கரி, வாஸந்தி போன்ற எழுத்தாளர்களை – (இவர்கள் வெறும் பொழுதுபோக்கு - ஜனரஞ்சக - வியாபாரக் கவர்ச்சி எழுத்தாளர்கள். இவர்கள் தம்மைச் சூழவுள்ள யதார்த்த வாழ்க்கையை எழுது வதுமில்லை; கலையழகற்ற இவர்களின் எழுத்துக்க ளால் தமிழ் மொழிக்கு எவ்வித பயனுமில்லை.) தெரிகிறது. ஆனால், எமது மக்களின் வாழ்க்கையை வெவ்வேறு நோக்குக் கோணங்களில் - மண்ணின் மணங்கமழ - வளமான மொழிச் சிறப்போடும் உணர்வு நலனோடும் கலைப் படைப்புகளாக - ஆக்கித் தந்துள்ள இலங்கையர்கோன், சி. வைத்திலிங்கம், அ. செ. முரு கானந்தன், வ. அ. இராசரத்தினம், எஸ். பொன்னுத் துரை, மு. தளையசிங்கம், நந்தி, ரஞ்சகுமார், உமா வரதாரஜன் போன்ற புனைகதை எழுத்தாளர் களையோ; மஹாகவி, தா. இராமலிங்கம், நீலாவணன், காசி ஆனந்தன், முருகையன், மு. பொன்னம்பலம், சு. வில்வரத்தினம் போன்ற கவிஞர்களையோ பற்றித் தெரிவதில்லை; தெரிந்துகொள்ளவேண்டுமென்ற ஆர் வமுமில்லை!

பல்வேறு இலக்கியக் குழுக்களினதும் கடந்தகாலச் செயற்பாடுகளில் நிகழ்ந்த பல தவறுகளை, இதற் கான காரணங்களாகக் காட்டலாம். எனினும் அடிப் படையானதாகவும் தீங்கு விளைவித்து வருவதாகவும் இருப்பது, எமது மக்களிடம் - வாசகர்களிடம் இருந்து

(23 ஆம் பக்கம் பார்க்க)

### விடுதலை வீராங்கனை...

(16ம் பக்கத் தொடர்ச்சி)

போது அவள் ''ஆங்கிலேயர்களை கடவுள் நேசிக்கி றாரா அல்லது வெறுக்கிறாரா என்பது பற்றி எனக் குத் தெரியாது. ஆனால் அவர்கள் பிரான்சிலிருந்து தூக்கி எறியப்படுவார்கள்'' என்று பதில் அளித்தாள்.

குருமாரின் நீதிமன்று அவளைக் குற்றவாளியாகக் கண்டு பலர் முன்னிலையில் கழுமரத்தில் இறுக்கிக் கட்டி கீழே பெருங்கட்டைகள் அடுக்கப்பட்டு கொடுந் தீவைக்கப்பட்டு அவள் நெருப்புக்கு இரையாக்கப் பட்டாள். இது நடந்தது 1431 மே மாதம் 30ம் திகதி அப்போது ஜோனுக்கு வயது பத்தொன்பது.

எந்த விதத்தில் பார்த்தாலும் ஜோன் ஆப் ஆர்க் பிரான்சு நாட்டின் விடுதலைக்காகவும் ஒற்றுமைக் காகவும் தன்னைத் தற்கொடை செய்து அவற்றின் சின்னமாக விளங்குகிறாள் என்பது உண்மை. அத்து டன் தற்கொடையிலும் தாய் நாட்டுப் பற்றிலும் பெண்கள் ஆண்களைவிட எந்த விதத்திலும் குறைந்த வர்கள் அல்லர் என்பதையும் அவளது வாழ்க்கை எமக்கு எடுத்துக் காட்டுவதாயும் உள்ளது.

— தியாகராஜா—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வடக்கையும் கிழக்கையும் இணைப்பது ஐ.தே.க. வின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு முரணானது; அப்படி அரசாங்கம் செல்லமாட்டாது" இப்படிக் கூறியிருக்கிறார் அரசின் தலைவரும், அரசாங்கத்தின் தலைவருமான நிறைவேற்றதிகாரங் கொண்ட சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா.

# சந்தர்ப்பத்தை கைநழுவவிட்ட பிரேமதாசா!

உள்ளூர் அரசியல்

—சாரணன்—

இலங்கைத் தீவு இத்தனை பெரும் இன்னல்களை அனுபவித்தபின்பும், சிங்கள அரசு இத்தனை பெரும் அவமானங்களை உலகரங்கிற் சம்பாதித்த பின்பும், ஓர் இந்திய இராணுவம் தீவுக்குள் வந்து வெளியேறிய பின்பும் இப்படிஓர் அறிக்கையைத்தான் சிங்கள ஜனாதிபதியால் விடமுடிகின்றதென்றால் ஐக்கிய இலங்கைக்குள் ஓர் அரசியற்தீர்வைக் காண சிங்கள அரசால் ஒருபோதும் முடியாது என்பதை இது திட்டவட்டமாகத் தெளிவாக்கியுள்ளது.

இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியற் தீர்வைச் சிங்கள அரசால் காணமுடியாதென்பது எப்போதோ தெரிந்த விடயம். இதை விளக்குவதற்கு அரசியல் ஞானம் அவசியமில்லை. அரசியற் தீர்வைக் காணமுடியாது போனாலும் அரசியற் சுமூகநிலையை உருவாக்கக் கூடிய வாய்ப்பு கடந்த ஏப்ரல் மாதமளவிற் காணப்பட்டது. இதற்கு முன்னோடியான வகையில் புலிகளும் தமது கருத்தினை முன்வைத்திருந்தனர். போரும் பேச்சுவார்த்தையும் ஒரே நேரத்தில் நிகழமுடியாது; பேச்சுவார்த்தைக்கான நற்சூழலைத் தோற்றுவிக்கும் வகையில் முதலில் போர் நிறுத்தமும் பின்பு பேச்சுவார்த்தையும் என்ற கருத்தினை முன்வைத்தனர். இதனைப் பயன்படுத்தி இருந்திருந்தால் சிங்கள-தமிழ் புதுஆண்டை ஒட்டி ஒரு சுமூக நிலையைப் பிரேமதாசா அரசாங்கத்தினால் ஏற்படுத்தியிருக்க முடியும்.

ஆனால் இரு காரணங்களின் நிமித்தம் பிரேமதாஸா அரசாங்கம் இதனைக் கைநழுவ விட்டது. ஒன்று, போர்நிறுத்த காலத்தைப் பயன்படுத்திப் புலிகள் தம்மைப் பலப்படுத்தி விடுவர் என்ற இராணுவத்தின் நிலைப்பாடு. இரண்டு, பிரேமாவைக் குற்றம்சாட்டும் வகையில் உடுகம்பொல வெளியிட்ட கொலைப்பட்டியல் விவகாரம். உடுகம்பொல விவகாரம் தன்னைத் தென்னிலங்கையில் பதவி இறங்கச் செய்து விடும் என பிரேமா அஞ்சினார். எனவே இனப்பிரச்சினை சம்பந்தமாகவும் ஏதாவது துணிகரமான நிலைப்பாடெடுக்க முற்படின் உடுகம்பொல விவகாரமும் கூட்டுச்சேர, அத்துடன் இராணுவத்திற் தோன்றக்கூடிய அதிருப்திகளும் ஒன்றுசேர்ந்து தன்னைப் பதவி இறங்கச் செய்துவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாக இனப்பிரச்சினையை அப்படியே புறம்தள்ளிவிட்டு உடுகம்பொல விவகாரத்தை கீழ்நிலைப்படுத்த முயன்றார். இறுதியில் அதில் வெற்றியும் கண்டார்.

உடுகம்பொல விவகாரம் முறியடிக்கப்பட்டுவந்த காலகட்டத்தில் இன்னொரு பிரச்சினை முதிர்ச்சியடையத் தொடங்கியது. அதாவது இந்தியா புலிகளைத் தடைசெய்யலாம் என்ற கருத்து வளரலாயிற்று. இது தமக்குச் சாதகமானது என இராணுவம் இராணுவக் கண்ணோட்டத்திற் சிந்திக்கத் தொடங்கினதால் போர் நிறுத்தத்திற்கான வாய்ப்பு பின்பு அறவே இல்லாது போனது. இதைத் தொடர்ந்து இந்தியா புலிகளைத் தடைசெய்தமை இராணுவக் கண்ணோட்டக் காரரின் கரங்களை முற்றிலும் பலப்படுத்தியது.

சுமூக நிலையைத் தோற்றுவிப்பதற்குரியதாக இருந்த ஏப்பிரல் மாதச் சூழலைப் பிரேமதாஸா அரசாங்கம் போதிய முயற்சிகளுடன் பயன்படுத்தத் தவறியமையானது பிரேமதாஸா அரசாங்கம் தனது ஆட்சிக் காலத்தில் விட்ட மிகப்பெரும் அரசியற் தவறாக எதிர் காலத்தில் சித்தரிக்கப்படும். இப்போது பிரச்சினையின் தர்க்கபூர்வ வளர்ச்சி அனைவரின் கைகளையும் கடந்ததாகச் செல்கின்ற சூழலில் பிரேமா தனது ஆட்சித் தளமாகிய தென்னிலங்கையைப் பேணுகின்ற வகையில் இணைப்புப் பற்றிய தனது மறுப்பை வெட்டொன்று துண்டிரண்டாகக் கூறிவிட்டார்.

பிரேமதாசா ஒரு சமாதானப் பிரியன் என்பதல்ல மேற்படி விளக்கத்தின் அர்த்தம். தனது ஆட்சியை நடத்த ஒரு சுமூகநிலை அவசியம் என்று அவர் உணர்ந்திருந்தார் ஆனால் பக்கப் பிரச்சினைகளுக்கு அஞ்சிப் பிரதான பிரச்சினையைக் கைநழுவ விட்டுவிட்டார் என்பதே இங்கு கவனிக்கப்படவேண்டியது.

அரசியற் தீர்வுக்கான சகல கதவுகளும் அடைக்கப்பட்டுவிட்டன என்பது இன்று வெளிப்படையாகத் தெளிவாகிவிட்டது என்பது உண்மைதான். ஆனால் அதுபோலவே சுமூகநிலையை உருவாக்குவதற்கான சகல கதவுகளும் மூடப்பட்டுவிட்டனவா? கடினமானதும் அரிதானதுமான மாற்றுவழிகள் சில இருக்கின்றன. அவை முற்றிலும் மூடப்பட்டுவிடவில்லை. ஆனால் அதனைச் செய்வதற்குரிய சாமர்த்தியத்தையும் துணிவையும் பிரேமதாஸா அரசாங்கத்திடம் எதிர்பார்ப்பது கடினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று தமிழீழத்தில் குறிப்பாகக் குடாநாட்டில் தனியார் கல்வி நிறுவனங்கள் பிரமிக்கத்தக்க வகையில் வளர்ச்சியடைந்து கல்விமுறையில் ஒரு உறுப்பாக, பாடசாலைக் கல்விக்கு ஒரு சவாலாகக் காணப்படுகின்றன. ஆனால், அவற்றில் புரையோடிப் போய் இருக்கும் நாற்றங்கள் எந்த ஒரு சமூகமும் ஏற்றுக் கொள்ள முடியாதவை. இக்கல்வி நிறுவனங்கள் கல்வி என்ற பெயரால் சுரண்டலின் ஒரு பகுதியாகவுள்ளன. பாடசாலைக் கல்வியில் ஏற்பட்ட சிறு இடைவெளியை நிரப்பத்தோன்றிய தனியார் கல்வி நிறுவனங்கள் பாடசாலைக்கு மாற்றாக இன்று தோற்றம் பெறுகின்றது. கல்வி நிர்வாகக் குறைபாட்டையும், கல்விமுறையின் குறைபாட்டையும் தமக்கு சாதகமாக்கிக்கொண்டன. அங்கு நடைபெறும் தில்லுமுல்லுகளையும் சுரண்டலின் வேறுபட்ட வடிவங்களையும் சமூகம் இன்றும் இனம் காணவில்லை. இன்று இனம் காணத்தவறின் சமூகம் தனது சமநிலையை மிக விரைவில் இழக்கும் அபாயம் தவிர்க்கமுடியாததாகிவிடும்.

வெட்டிவிடுவர். மலைத்து நிற்பர் மாணவர். ஆனால் மடி நிறைந்துவிடும் நிறுவனங்களுக்கு. இடம்பெயர்ந்தோர், மாவீரர் குடும்பப்பிள்ளைகள் இலவசம் என்பர். அது பேச்சளவில் தான். வெளிப்பார்வை சிறப்பாக்கப்படுகின்றது. ஆனால் உள்ளுக்குள் அசிங்கங்களே உள்ளன. ஒரு சில மாணவரை அவ்வாறு இலவசமாக விட்டாலும் அவர்கள் சமமான முறையில் நடாத்தப்படுகின்றனரா? என்பது கேள்விக்குறிதான். மாணவனின் கட்டண காட்டைப் பார்ப்பதில் உள்ள ஆர்வம் அவனது முகத்தைப் பார்ப்பதில் இல்லை. கட்டணத்திற்கு மேல் 'அட்வான்ஸ்' வாங்குவார்கள் ஆனால் அது திரும்பக் கொடுபடுவதில்லை. அவனை வேறு நிறுவனத்திற்குச் செல்லாது தடுக்கவும் அவ்வாறு சென்றால் அகப்பட்டது மீதி என மடியை நிறைக்கவும் 'அட்வான்ஸ்' பணம் வாங்கப்படுகின்றது. இந்த 'அட்வான்சுக்கு' வெவ்வேறு பெயரை வைத்து மாணவனை மடக்கிவிடுவர்.

விளம்பரங்கள் மாணவனைத் தெறிகெட்டு ஓடச் செய்கின்றன. மாணவர் குறைவாக இருந்தால் பிரிவு 5

# <□> தனியார் கல்வி நிறுவனங்கள் - ஒரு பார்வை

சமூகப்பார்வை இல்லாத தனியார் கல்வி நிறுவனங்கள் புனிதசேவை என்பதன் பெயரால் செய்கின்ற சில நடவடிக்கைகளை வெளிப்படுத்த வேண்டியுள்ளது. இவற்றை ஒழுங்குபடுத்த சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனாலும் அவை பலனளிக்கவில்லை. கட்டணங்கள் வரையறுக்கப்பட்டன. ஆனால் நிறுவனங்கள் வேறு வடிவில் செய்யப்பட்டன. ஒரு ஆசிரியர் ஒரு பாடத்துக்கு பல கட்டணங்களை ஒரே மாணவனிடம் வாங்கும் அவல நிலை உள்ளது. நாட்டின் சூழலைப் பயன்படுத்தி இந்நிறுவனத்தில் அலகு ஒன்று மட்டுமே முடிக்கப்படும். அலகு இரண்டு மறு நிறுவனத்தில்; அலகு மூன்று இன்னோர் நிறுவனத்தில் எனக் கூறி பாடத் திட்டத்தை முடிக்க இவ்வாறு தான் செய்யலாம் எனக் காரணம் காட்டி மாணவனிடம் ஒரு பாடத்திற்குப் பல கட்டணங்கள் அறவிடப்படுகின்றன.

இதனை எந்த ஒரு கல்வி நிறுவனமும் மறுக்கமுடியாது. அனுமதிக்கட்டணம் ஒரு நிறுவனத்தில் 15/- இன்னொன்றில் 25/- சில மாதங்கள் விட்டு மீண்டும் படிக்கச் சென்றால் மீண்டும் அனுமதிக்கட்டணம் செலுத்தவேண்டியுள்ளது. தவறுதலாக அனுமதி அட்டை தொலைக்கப்பட்டால் அதற்கு ஒரு தண்டப் பணமும் உள்ளது. மாதமுடிவில் உதாரணமாக 25 ம் திகதி ஒரு மாணவன் அனுமதி எடுத்தால் அடுத்து வரும் 5 நாட்களுக்கும் முழுமாதக்கட்டணம் எடுத்து விடுவர். ஒரு மணித்தியால வகுப்பை 45 நிமிடத்தில் முடிப்பர். பல இடங்களில் கல்வி கற்பிப்பதால் நேரத்தில் ஒரு வெட்டுதல் செய்யப்பட்டு இன்னொரு வகுப்பை எடுக்க நேரம் சேர்த்துவிடுவர். பல நிறுவனங்களில் கற்பிப்பதால் [ஒரு சுழற்சி] முறையைக் கையாண்டு மாதம் ஒன்று அல்லது இரண்டு வகுப்பை

ஆரம்பம் என விளம்பரம் வரும். பிந்திப் படிக்க வெளிக்கிட்ட மாணவன் புதிய பிரிவு முதலில் இருந்து படிக்கலாம் என்ற ஆர்வத்தில் ஓடுவான். அங்கு பிரிவு இரண்டே ஆரம்பித்திருக்காது. இரு கிழமை புது வகுப்பை நடத்தி இறுதியில் முந்திய பிரிவில்சேர்த்து விடுவர். அடுத்த விளம்பரம் பிரிவு6 எனவரும். இம்முறை 94ம் ஆண்டு க. பொ. த உயர்தர வகுப்பைப் பாருங்கள். 94 க. பொ. த உயர் தரம் மாணவர்களுக்கு சாதாரணதர பரீட்சை பெறுபேறு வரும்வரை வகுப்புக்கள் ஆரம்பிக்கக் கூடாது என்பது ஒன்றியவிதி. ஆனால் அம்மாணவர்களை நன்குஅறிந்திருந்தும் 93 க. பொ. த உயர்தர மாணவர்களோடு சேர்த்துபடிப்பித்தனர். ஏற்கெனவே ஒருவருடம் படித்து விட்ட மாணவனுடன் 94 ல் உயர்தர பரீட்சை எடுக்க வேண்டிய சாதாரண தர பெறுபேறே வராத- ஒன்றுமே தெரியாத மாணவர் 93 ம் ஆண்டு மாணவரோடு சேர்த்து புதிய அலகு உங்களுக்கு விளங்கும் என ஆசைவார்த்தை கூறி அமர்த்தி மடியை நிறைத்துவிட்டனர். சாதாரண தர பெறுபேறு வந்ததும் பத்திரிகைகளில் விளம்பரம் பறந்துவந்தன 94 ம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு வகுப்புகள் ஆரம்பம் என அவை முரசறைந்தன. ஆனால்பல நிறுவனங்கள் புதிய பிரிவைத் தொடங்கவில்லை. ஆசிரியருக்கு நேரமில்லை. ஏற்கெனவே அம்மாணவர்கள் 93ம் ஆண்டுகளோடு சேர்க்கப்பட்டு விட்டனர். காலம் கடத்திப் பின்பு அங்கலாய்த்து வருபவர்களுக்கு என புதிய பிரிவைத் தொடங்கினர் இப்போது நிறுவனங்கள் நேரத்தை மிச்சம் பிடிக்க புதிய முறையைக் கையாண்டன. 92 க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு நடந்த சனி ஞாயிறு வகுப்புகளை சில நிறுவனங்கள் கிழமை நாட்கள் செவ்வாயும் வியாழனும் வகுப்பை வைத்தன. அம்மாணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் பாடசாலையை விட்டனர். வளம் கொண்ட பாடசாலை தூங்கி வழிய, வளமற்ற தனியார் நிறுவனக் கொட்டில் நிரம்பி வழிகின்றன. ஆனால் பாடசாலை மாணவர்களுக்கு கிழமை நாட்களில் வகுப்பு வைக்கக்கூடாது என்பது ஒன்றிய விதி.

அலகு அலகாகக் கட்டணம் வசூலித்த தனியார் கல்வி நிறுவனங்களின் பண ஆசை அத்துடன் நிற்கவில்லை. வினா விடை வகுப்பு வேறுவேறு இடங்களில் வைத்துக் கட்டணம் அறவிடுகின்றன. இவ்வளவும் போதாது. கட்டுரைகள் விற்பர், ரியூட் என அதற்குப் பெயர். அதற்கு விலை அளவு கிடையாது. ஒரு மாணவன் பல்வகைக் கட்டணங்களுக்கு மேலாக பெருந்தொகைப் பணத்தை ரியூட் வாங்க என விட வேண்டும். சிலசமயங்களில் இந்த அநியாயம் ஏன் எனச் சிலர் கேட்டால் நிறுவனங்கள் வெருட்டத் தொடங்கும். கொழும்புக்கு நான் சென்று படிப்பித்தால் அல்லது நிறுவனத்தை நடத்தினால் மாதம் ஒரு இலட்சம் உழைப்போம். இங்கு என்ன? மாதம் 50,000/- அல்லது 25,000/- ரூபா தானே என்பர். மாணவர்கள் பெட்டிப் பாம்பாகிவிடுவர். புகழ்பெற்ற சில ஆசிரியர்கள் புனித சேவை இது தான். தம்பக்கம் மாணவரை ஈர்க்க பல வழிசெய்வர். புதுமையான விளம்பரங்கள் செய்வர். சில சமயங்களில் ஒரு ஆசிரியரை இன்னொரு ஆசிரியர் இகழுவர். கண்டபாட்டுக்கு ஒரு ஆசிரியரை இன்னொரு ஆசிரியர் இகழுதல், பேசுதல் மாணவர் முன்னால் தாராளமாக நடைபெறும். ஆனால் சில ஆசிரியர்களுக்கு தராதரமே இல்லை. ஒருமுறை வீரகேசரியில் வந்த ஒரு காட்டூனை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும். க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் ஒரு பாடத்தில் கூட ஒருவர் சித்தியடையவில்லை. வயது முதிர்ந்தவர் ஒருவர் கேட்கிறார் - தம்பி இனி என்ன செய்யப்போகிறாய்? பரீட்சையில் தோல்வியடைந்த மாணவன் கூறுகிறான் - ஒரு ரியூட்டறி வைக்கலாம் என யோசிக்கிறேன். இந்தளவு இழிநிலையா எமது கல்விக்கு? சில பெரிய கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் மட்டுமல்ல ஆசிரியர்களும் சுரண்டப்படுகின்றனர் என்பதும் உண்மை. தொகை பெரிதாக இருப்பதனால் சுரண்டலை எதிர்க்க ஆசிரியர் முனைவதில்லை. அதிகம் கதைத்தால் புதிய ஆசிரியர் வந்துவிடுவார். ஆயிரக்கணக்கில் வரும் மாணவர்கள் இயற்கை உபாதைகளைக் கழிக்க இடம் இல்லை. மாணவிகள் நிலை இவ்விடயத்தில் பரிதாபம்.

மாணவர்கள் முழுநேரமும் உள்வாங்கப்படுகின்றனர். சனி, ஞாயிறுகளில் வகுப்பு முடிந்ததும் அதே ஆசிரியரிடம் மறு அலகு படிக்க மறு நிறுவனத்திற்கு மாணவர் றேஸ் ஓடும் நிகழ்ச்சி பரிதாபம். வகுப்பில் முன் 100 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். தற்போது 200 மாணவர். ஆனால் வகுப்பில் 300 க்கு மேலேயே சில இடங்களில் உள்ளனர். பல்கலைக்கழகக் கல்வி முறையைப் பாலர் வகுப்பிலேயே கொடுத்துவிட முயற்சிப்பதில் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு நிகர் அதுவே தான். புதிய ஆசிரியர் தோன்றுவதைப் பழைய ஆசிரியர் விரும்பார். ஏனெனில் தன்தொகை குறைந்துவிடும். அதற்காக மூலைமுடுக்கெல்லாம் ஓடுவார். இதனால் ஆற்றல் மிகுந்தவர்கள் உட்புகமுடியாதுள்ளது. பெருந்தொகைப் பணத்தை உழைக்கின்றனர். அப்பணத்தின் அளவிற்கு சமூகம் பயன்பெறவில்லை. 9 கோடி ரூபா தனியார் கல்வி நிறுவனங்களில் புரள்வதாக ஓர் ஆய்வுகாட்டுகின்றது. ஒரு புதிய முதலாளித்துவம் தலை தூக்குகின்றது. எல்லா நாடுகளிலும் அதிக பணத்தை உழைப்பவர் மீது சமூக நீதியின் பெயரால் வரி வசூலிக்கப்படுகிறது. ஆனால் இங்கு தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அந்தப் பிரச்சினையில்லை. வந்தது இலாபம். எனவே சிந்தனை எந்த வழியில் பிடுங்கலாம் என்பதே. எனக்குத் தொழில் இல்லை. எனவே ரியூற்றரியில் படிப்பிக்கிறேன் என சில ஆசிரியர் கூறுவர். ஆனால் 5000/- சம்பளத்தில் ஒரு வேலை எடுத்துக்கொடுத்தால் அவ்வாசிரியர் இத்தொழிலைவிட்டு அந்த வேலைக்கு செல்லவேமாட்டார். தனது பிள்ளையை முழுநேரமும் கல்வியில் ஈடுபடுத்தினால் வேறு பிரச்சினைகளைத் தவிர்த்துவிடலாம் என சில பெற்றோர் நினைக்கின்றனர். ஆனால் தனியார் கல்வி நிறுவனங்களில் ஒழுங்கு கட்டுப்பாடு இல்லை. இதனை ஒழுங்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல் வேண்டும். பாடசாலை சரியாகப்பயன்படுத்தப் படவேண்டும். பாடசாலைகளில் ஏற்பட்ட ஒரு இடைவெளியை நீக்கத்தான் தனியார் கல்வி நிறுவனங்கள் வந்தன. அந்தவகையில் அவை சமூகப்பார்வையுடன் செயற்பட்டிருந்தால் தனியார் கல்வி நிறுவனங்கள் பயனுள்ள அலகாக இருந்திருக்கும். பகல் நேர வகுப்பு என்ற போர்வையில் பாடசாலையே முடக்கும் நிலை தவிர்க்கப்படவேண்டும். வளம்கொண்ட பாடசாலைகள் சீர்திருத்த வேண்டும். வரையறைக்கு உட்பட்ட கல்விச்சேவையை தனியார் கல்வி நிறுவனங்கள் வழங்கும் வகையில் அவை புனரமைக்கப்படவேண்டும். சுரண்டல் ஒழிக்கப்படவேண்டும். மாணவர்களிடம் ஒழுங்கு கட்டுப்பாட்டை வளர்க்கவேண்டும் அவர்களின் சிந்தனையை தூண்டவேண்டும் மாணவரின் ஆளுமை, தலைமை தாங்கும் மனப்பாங்கு சமூகப்பார்வை கொண்ட சமூக சூழ்நிலை விளங்கும்தன்மை ஆகியவற்றை ஒருபோதும் தனியார் கல்வி நிறுவனங்கள் வழங்கமுடியாது. பாடசாலைகளே வழங்கமுடியும். பாலர் வகுப்பிலேயே ரியூற்றரி என்ற நிலை நீக்கப்படவேண்டும். சமூகத்தில் கணிசமான ஏழைப்பிள்ளைகள் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு செல்ல முடியாதுள்ளது. கல்வி என்பது சமூகத்தின் ஒரு பிரிவின் சொத்து அல்ல. சமூகத்தின் சமநிலை பேணப்படவேண்டும். இதற்கு ஏற்றவகையிலே தனியார் கல்வி நிறுவனங்கள் செயற்பட வழி வகுக்கப்படவேண்டும்.

— குமாரவேல்

குறிப்பு:- இக் கட்டுரையாளரின் கருத்துகளிற்கு மாறுபட்ட கருத்துக்கள் இருப்பின் அதனை சாளரம் வரவேற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணில் தெரியும் கதைகள்

— புவி —

வன்னிப் பகுதியில் சிறுபோக நெல் விதைப்பு ஆரம்பமானால், விவசாயிகளுக்கு ஏற்படும் பெரிய பிரச்சினை தண்ணீர்ப் பிரச்சினைதான்.

குளத்திலிருந்து வாய்க்கால்கள் வழியாக வரும் நீரை எல்லா கமக்காரருக்கும் சமனாகப் பங்கிடுவதில் ஒவ்வொரு முறையும் ஏதாவது பிரச்சினைகள் வந்தே தீரும். சில சமயங்களில் இந்த தண்ணீர் பிரச்சினை பெரும் கை கலப்புகளை உண்டு பண்ணி, வெட்டுக் குத்திலும் முடிந்து விடுவதுண்டு.

வன்னியின் ஓர் மூலையில் அமைந்துள்ள காட்டு முறிப்பு என்னும் இந்தக் கிராமத்திலும் இதே பிரச்சினை ஒவ்வொரு சிறுபோக விதைப்புக் கட்டத்திலும் தலை தூக்கும். இக் கிராமத்தைப் பொறுத்த வரையில் சில பெரிய கமக்காரர்களால் தான் இப் பிரச்சினை ஏற்படுவது வழக்கம். இவர்கள் சிறு விவசாயிகளை விதைக்க விடாமல் அவர்களின் தண்ணீர்ப் பங்கினையும் வாங்கி தாங்களே பயிர் செய்வதற்கு ஒவ்வொரு முறையும் பல சதித்திட்டங்களைப் போட்டு விடுவர். அதிகாரிகளை அலுவலகத்திலும், அவர்கள் தங்கும் விடுதிகளிலும் அடிக்கடி சந்தித்து, அவர்களின் தேவைகளைக் கவனித்து தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வார்கள்.

அன்று அந்தக் கிராமத்தின் பாடசாலைக் கட்டடத்தில் நடந்த கூட்டத்தில் அதிகாரியும் அவரின் வால் பிடிக்கமக்காரர்களும் நன்றாக மூக்குடைபட்டனர். புதிதாக கடமையேற்று முதன் முதலாக அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அந்த அதிகாரி இப்படி நடக்கும் என்று கொஞ்சமும் எதிர் பார்த்திருக்கவில்லை,

பாடசாலைக் கட்டடத்திற்குள்ளிருந்து வெளியே வந்த அதிகாரியின் முகம் சிவந்திருந்தது.

நடந்தது இதுதான்.

கூட்டத்திற்கு வந்த அந்த அதிகாரிக்கு முன்னரே பெரிய கமக்காரர்கள் அவரைச் சந்தித்து காதில் வேதம் ஓதி விட்டிருந்தனர்.

கூட்டத்திற்கு வந்தஅதிகாரியோ அந்தக் கிராமத்து விவசாயிகளின் தோற்றத்தையும், நடையுடையினையும் அவதானித்து விட்டு முட்டாள்கள் என்று நினைத்து விட்டார். அவரின் பேச்சும் பார்வையும் அவர்கள் முன் அப்படித்தானிருந்தது. இடையிடையே ஆங்கிலத்திலும் பேசினார்.

அந்த விவசாயிகள் கூட்டத்தினிடையே அதிகாரியின் பேச்சை இடைநிறுத்தி ஒருவர் எழும்பிப் பேசினார். சுமார் ஆறடி உயரமிருக்கும். அவருக்கு சுமார் ஐம்பது வயதிற்கு மேலிருக்கும். அதிகாரிக்கு மேலாக ஆங்கிலத்திலும் அவர் கதைத்தார். சிறிது கோபத்துடன், ''இங்குள்ள விவசாயிகளை மடையர் என்று எண்ணிக் கதைக்க வேண்டாம். புதிதாக வந்திருக்கும் அதிகாரியான நீங்கள் முதலில் இந்த கிராமத்தின் விவசாயப் பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து பார்த்து விட்டு இக் கூட்டத்திற்கு வந்திருக்கவேண்டும்.'' என்று ஆங்கிலத்தில் கணீரென்ற குரலில் பேச அதிகாரிக்கு திகைப்பும், வெட்கமுமாய்ப் போய்விட்டது.

அடுத்தநாள் தன்னைச் சந்திக்க வந்த பெரிய கமக்காரர்களிடம் அவரைப்பற்றி விசாரித்தார் அதிகாரி.

சிதம்பரம் அவரது பெயர் சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக அந்தக் கிராமத்தில் வாழ்ந்து வருபவர். திருமணமாகாத தனிக்கட்டை. சொந்தக்காரர்கள் என்று யாரும் இருக்கிறார்களா என்பது பற்றி எவருக்கும் தெரியாது. இரண்டு ஏக்கர் வயல் நிலம் அவருக்கு சொந்தமாக அந்தக் கிராமத்திலுண்டு. அந்தக் கிராமத்திலுள்ள அனைவருமே அவருக்கு மரியாதை. ஒரு சில பெரிய கமக்காரர்களைத் தவிர.

## 'சிதம்பரம் அண்ணை'

மேலே சொல்லப்பட்ட சம்பவம் ஒரு உதாரணமே தவிர இதைப் போன்ற பல சம்பவங்கள் அடிக்கடி அந்தக் கிராமத்தில் நடக்கும் சண்டைகள், வாக்கு வாதங்கள், பிரச்சினைகள்... எல்லாவற்றையும் கடைசியாக சிதம்பரம் அண்ணை தான் விசாரித்து ஒரு மாதிரியாக சரிப்படுத்தி வைப்பார்.

அந்தக் கிராமத்து மக்களோடு, அவர்களின் சில பிற் போக்குத் தனங்களைப் போக்க பல வழிகளிலும் சிதம்பரம் அண்ணை பாடுபடுவார். அதனால் அடிக்கடி அவர்களிடம் கோபித்து சண்டையும் பிடிப்பார். ஆனாலும், எவரும் அவரிடம் கோபித்துக் கொள்வதில்லை. ஆறுதலாக இருக்கும் சமயங்களில் அவருக்கு நெருக்கமானவர்கள் அவரிடம் மெல்ல மெல்ல சில கேள்விகளைத் தொடுப்பார்கள்.

''அண்ணை, ஏன் நீங்கள் கலியாணம் முடிக்கேல்லை?''

''எல்லாரும் கலியாணம் முடிக்கிறது தானே. அதால நான் முடிக்காமல் இருப்பம் எண்டு இருந்துட்

இப்பகுதியில் பிரசுரமாகும் கதைகள் உண்மைச் சம்பவத்தினை அடிப்படையாக வைத்து எழுதப்படுபவை.

பெயர்கள், ஊர்கள் என்பன மட்டுமே கற்பனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன்'' ஒரு சிரிப்புடன் அவர் கூறுவார். அந்த சிரிப்புக்குள் மெல்லிய சோகம் ஒன்று இழையோடுவதை அப்போது காணலாம்.

''ஏனண்ணை தாடி வழிக்கிற தில்லை, கனகாலமாக தாடி வைத்திருக்கிறியள் ஏன்?''

மீண்டும் அதே சிரிப்புடன் சொல்லுவார்.

''தாடி வழிக்கிறது மினக்கெட்ட வேலையடாப்பா இப்படியே விடுறது பிரச்சினை இல்லை தானே... அதோட இந்தத் தாடிக்கு ஒரு கதை இருக்கு பிறகு ஆறுதலாகச் சொல்லுறன்''

''அண்ணையின்ர சொந்தக்காரர் தமையன் தம்பியெண்டு ஒருதருமில்லையே?''

''ஏனடாப்பா நீங்கள் இருக்கிகிறியள் தானே''

இப்படித் தான் அவர் பதில் சொல்லுவார். இதனால் எவரும் அவரிடம் எதனையும் தூண்டிக் கேட்பதில்லை.

ஆனால், சிலர் தங்களுக்குள்- இவருக்கு இளமையில் ஒரு காதலி இருந்ததாகவும் அவள் இறந்து போனதாகவும், அந்த சோகத்தினால் தான் திருமணமாகாமல் தனித்து வாழ்கிறார். தாடி வளர்க்கிறார் என்றெல்லாம் பேசிக் கொள்வார்கள்.

அப்போது இந்திய இராணுவம் இங்கிருந்தகாலம். அடிக்கடி அந்தக்கிராமத்திற்கு இராணுவத்தினர் வந்து அந்தக்கிராமத்து இளைஞர்களை பிடித்து விசாரணை செய்யும்போது சிதம்பரமண்ணை எங்கிருந்தாலும் ஓடி வந்து விடுவார். ஆங்கிலத்தில் பேசுவார். இளைஞர்களை விடுவித்துவிடுவார்.

இராணுவம் இளைஞர்களை மிகவும் ஆவேசமாக தேடியலைந்த ஓர் காலகட்டத்தில் ஒருநாள் கவச வாகனங்களுடன் பெருந்தொகையான இராணுவம் அந்த கிராமத்தைச் சுற்றிவளைத்தது. பல இளைஞர்களை வாகனத்தில் பிடித்து ஏற்றியது. பொதுமக்கள் அனைவரையும் அடையாள அட்டைகளுடன் அந்த கிராமத்திலுள்ள கோயிலுக்கு வருமாறு ஒலிபெருக்கியில் அறிவித்தல் விடுத்தது.

எல்லோரும் சாப்பாடுமின்றி கொளுத்தும் வெய்யிலில் கோயில் முன்றலில் தடுத்துவைக்கப்பட்டனர்.

இளம் பெண்கள் இம்சிக்கப்பட்டனர். பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். இதனைப் பார்த்துக்கொண்டிருந்த சிதம்பரத்தாருக்கு ஆத்திரம் வந்தது. அனைவரும் பயத்தில் வாய்மூடி இருந்த சமயம் இவர்மட்டும் எழும்பிக் கதைத்தார். இது அநியாயம் என்றார். வாதாடினார்.

அந்த இராணுவத்தினர் மத்தியில் இருந்த ஓர் அதிகாரி மட்டும் அவரை ஒருவிதமாக, வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டே இருந்தான்.

பரட்டைத்தலை,... நரைத்த தாடி... பழைய சாரம்... சேட் இல்லை... அவரின் அந்தத் தோற்றத்திற்கும் அந்த ஆங்கிலவார்த்தைகளுக்கும் என்ன தொடர்பு என்று யோசித்தானோ என்னவோ?

பின்னர் - அடிக்கடி இராணுவம் அவரது கொட்டில் வீட்டுக்குச் சென்று அவரை அச்சுறுத்த ஆரம்பித்தது.

''அண்ணை உங்களில கண்வைச்சுட்டாங்கள். எந்தநேரமும் உங்கட உசிருக்குஆபத்து வரலாம். அதால கொஞ்ச நாளைக்கு வேறு எங்கையெண்டாலும் போயிருங்கோ''

''அண்ணை வாங்கோ நான் கூட்டிக்கொண்டு போறன் பூனகரிக்கு. அங்கை கொஞ்சநாளைக்கு எங்கட பெரியப்பா வீட்டை நில்லுங்கோ''

இப்படி அவரோடு நெருங்கிப் பழகும் முத்தன், நவம், கந்தசாமி அனைவரும் அக்கறையுடன் அவரிடம் எவ்வளவோ வற்புறுத்திப் பார்த்தார்கள்.

அவர் கேட்கவில்லை.

அந்த கிராமத்தை விட்டுப்போக அவர் எள்ளளவும் சம்மதிக்கவில்லை.

ஒருநாள் அவரின் வீட்டிற்கு வழமைபோல் இராணுவம் வந்து தொல்லை கொடுத்தது.

போராளிகளுக்கு உதவுவதாக அவரைக்குற்றம் சாட்டி பயமுறுத்தியது.

அந்த சமயத்தில் நவம், முத்தன், கந்தசாமி, கனகசுந்தரம் ஆகியோரும் அவரோடு நின்றனர்.

இராணுவ அதிகாரியொருவன் கோபத்துடன் கதைக்க சிதம்பரத்தாரும் கடுமையாக விவாதித்துக் கொண்டிருந்தார்.

அவரோடு நின்றவர்கள் நடுங்கிக்கொண்டே நின்றனர். விவாதம் முடிவடைய அந்த இராணுவ அதிகாரி அவரை கடுமையாக எச்சரித்துவிட்டு சென்றான். சிறிதுதூரம் சென்றதும் திரும்பி சிதம்பரம் அண்ணையை நோக்கி ''ஏய், இங்கு யாரும் பொடியள் வந்தால் எங்களுக்கு வந்துசொல்ல வேண்டும்'' என்று ஆங்கிலத்தில் சொன்னான்.

சிதம்பரம் அண்ணைக்கு ஆத்திரம் எல்லை மீறியது.

''முட்டாளே எனக்குப் பக்கத்தில் நின்றால்கூட உனக்குக் காட்டித் தரமாட்டேன்'' அவரும் ஆங்கிலத்தில் கூச்சலிட்டுச் சொன்னார்.

அந்த இராணுவ அதிகாரியின் முகம் பேயறைந்ததுபோல வெளுறியது.

அருகில் இருந்த சிப்பாய்களிடம் ஏதோ சொன்னான்.

சிப்பாய்கள் அவரை இழுத்துச் சென்று அதிகாரிக்கு அருகில் நிறுத்தினார்கள்.

''காட்டித்தர மாட்டாயா?''

(23ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணில் தெரியும் கதைகள்....

(22ம் பக்கத் தொடர்ச்சி)

''இல்லை'' சிதம்பரத்தார் உறுதியாகவும் கோபத்துடனும் சொன்னார்.

அந்த அதிகாரி நெருப்புப் பெட்டியொன்றை எடுத்து ஒரு குச்சியைக் கொளுத்தி அவரின் தாடியில் பிடித்தான். தாடி எரிந்தது.

''இப்போதும் காட்டித்தர மாட்டாயா''

''இல்லை, இல்லை'' சிதம்பரம் அண்ணை கத்தினார்.

ஏதோ 'கதை' இருப்பதாக சொல்லப்பட்ட சிதம்பரத்தாரின் தாடி எரிந்து முகத்தையும் எரித்தது.

அவரை வாகனத்தினுள் பிடித்துத் தள்ளினார்கள் அந்த சிப்பாய்கள். வாகனத்தில் அவர் கொண்டு செல்லப்பட்டார்.

அதற்குப்பிறகு சிதம்பரம் அண்ணையை அந்தக் கிராமத்திலோ வேறு எங்குமோ எவரும் காணவில்லை.

ஒருவாரத்தின் பின்பு - அந்தக் கிராமத்தின் எல்லையிலுள்ள ஒரு பற்றைக்குள் அரைகுறையாக எரிந்த சடலம் ஒன்றைக் கண்டுவிட்டு வந்த முத்தன் அந்தக் கிராமத்தாரிடம் சொல்லி ஓலமிட்டு அழுதான்.

அந்தக்கிராமமும் - அந்தச் சின்னஞ்சிறு வயலில் முளைவிட்டிருந்த பயிர்களும் கூட சிதம்பரம் அண்ணையின் பிரிவால் மௌனமாக அழுதன.

எங்கள் மண் எங்கள் எழுத்தாளர்...

(17ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் இந்திய (தமிழ்) மயக்கம் ஆகும்; இலக்கியம், திரைப்படம், சஞ்சிகைகள் என்றால் தமிழகத்திலிருந்து வருவதே சிறந்தது என்ற 'குருட்டு நம்பிக்கை' ஆழமாக வேரோடியிருக்கிறது. இந்தக் குருட்டு நம்பிக்கையின் ஆணிவேர் பிடுங்கப்பட வேண்டும். 'எங்கள் மண், எங்கள் எழுத்தாளர் - எங்கள் நூல்கள்' என்ற உணர்வு எம்மிடையே ஏற்பட வேண்டும் - தமிழீழத்து நூல்களை எமது மக்கள் படிக்க வேண்டும் - வாங்கி ஆதரவு காட்ட வேண்டும்.

தன்னாட்சி உரிமைக்கான போராட்டம் கூர்மை அடைந்துள்ள இன்றைய நிலையில், இவ்விழிப்புணர்வு தவிர்க்கப்பட முடியாததாகும்; அதற்குரிய செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். பாடசாலைகளின் உயர் வகுப்புகள், பல்கலைக்கழகம், சனசமூக நிலையங்கள் என்பவற்றில் இந்தச் செயற் பாடுகள் தொடங்கப்பட வேண்டும். 1956 ஆம் ஆண்டில் சிங்கள மக்கள் மத்தியில் தோன்றிய பண்பாட்டு மலர்ச்சியின்-அதனைப் பேணுவதற்கான முயற்சிகளின்-செயற்பாட்டுத் தளங்களாக இவ்விடங்களே அமைந்திருந்தன என்ற வரலாற்று உண்மையை, இங்கு நாம் கவனத்திலெடுப்பதும் நல்லது.

## தமிழன் கனவு

கவிஞர் காசி ஆனந்தன் எழுதி 1968ம் ஆண்டு வெளிவந்த 'தமிழன் கனவு' கவிதை நூல் சாளரம் வெளியீடாக மறு பிரசுரம் செய்யப்பட்டு இப்போது விற்பனையாகிறது. நூல் தேவையானோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

## சிறுகதைப் போட்டி முடிவுகள்

சாளரம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் பெ. கணேசன் (அக்கராயன் ம. வி.) எழுதிய 'திரிசங்கு சொர்க்கத்தில் ஆசிரியர்' முத்துவிஜயராகவன் (யா/ இந்துக்கல்லூரி) எழுதிய 'காணாமல் போனவர்கள்' செல்வி நிதர்சனா பொன்னையா (புலோப்பளை மேற்கு) எழுதிய 'விழுது ஒன்று வித்தான போது' ஆகிய சிறுகதைகள் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்று பரிசுக்குரியவையாகியுள்ளன.

பரிசு வழங்கல் திகதி இவர்களுக்கு அறிவிக்கப்படும்.

இம் மூன்று கதைகளும் அடுத்தடுத்த இதழ்களில் தொடர்ந்து பிரசுரமாகும்.

சிறுகதைப் போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் 'சாளரம்' நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறது.

## ஓவிய வாக்கிய பதில்

அன்று அமெரிக்கா
ஹிரோசிமாவில்
குண்டினைப் போட்டு
ஒரே தடவையில்
பலரைக் கொன்றது.

சிறீலங்காவோ
தமிழீழத்தவரை
கொஞ்சம் கொஞ்சமாக
கொல்லுகிறது.

நிர்மலன்
கொக்குவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாளரம்

கதவு 2 (12) காற்றலை 06

# உறுதியான போராட்டம் தோற்பதில்லை

1991 - 1992 பல்கலைக் கழக அனுமதியில் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் புதிய நடைமுறையினால் தமிழ் மாணவர்கள் பாதிக்கப்படலாம்.

தமிழீழத்தில் போராட்ட சூழ்நிலையை காரணம் காட்டி சிறிலங்கா அரசு 1990 ஆகஸ்டில் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையை நடாத்தவில்லை.

1991 ஏப்ரல் திங்களிலேயே இம் மாணவர்கள் பரீட்சை எழுதினார்கள்.

புதிய நடைமுறையின் படி 1991 ஏப்ரலில் நடைபெற்ற க. பொ. த (உயர்தரம்) பரீட்சைக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி வழமையிலும் கூடுதலாக இருக்கும் என கூறப்படுகின்றது.

1991 ஏப்ரலில் பரீட்சை எழுதிய மாணவர்கள் கல்வியாண்டு 1991 - 92 ஆகும். அக் கல்வியாண்டுக்காக நடாத்தப்பட்ட பரீட்சைகளை வேறுவேறாக பார்ப்பது நியாயமில்லை என்பதே தமிழ் மாணவர்களின் கருத்தாகும்.

அதே வேளை சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மாணவர்களுக்கு பரீட்சை எழுதக் கூடிய நேரத்தை சிறப்பு பரீட்சை கொடுத்துள்ளது என்றும், ஆகஸ்ட் பரீட்சைக்கு வந்த வினாத்தாளும், ஏப்ரல் பரீட்சைக்கு வந்த வினாத்தாளும் ஒரே தன்மையை கொண்டிருந்தவை என்றும், இதனால் சிங்கள மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும், குரல் எழுப்பியுள்ளனர்.

இற்றைக்கு 22 ஆண்டுகளுக்கு முன்பு இப்படிக் குரல்கள் எழுந்ததை நாம் மறக்கவில்லை.

தமிழீழ மாணவர்களின் கல்வியானது சிறிலங்கா அரசால் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது.

பாடசாலைகள் குண்டுகள் வீசி தகர்க்கப்படுகின்றன. பல பாடசாலைகள் சிறிலங்காப் படையினரின் தங்ககங்களாக மாறியுள்ளன.

தமிழீழ மாணவர்களின் கல்வியை திட்டமிட்டு அழிக்கும் சிறிலங்கா அரசிற்கு எதிராக மாணவர்கள் பெரும் போராட்டங்களை நடத்தவேண்டும்.

உலகத்தின் கவனத்திற்கு இவ் விடயங்களை கொண்டுவரவேண்டும்.
இதனால் பயன் ஏதும் உண்டா என்று சிலர் கேட்பார்கள்?
அடக்கு முறைக்கும், அழிவிற்கும் எதிராக போராடவேண்டும்.
இந்த உணர்வே மிகப் பெரிய பலமும், பயனும் ஆகும்.
உறுதியான போராட்டங்கள் தோற்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சலவைத்தூளில் 'மில்க்வைற்' ஒரு தனித்துணை

மாணவ மாணவிகளே! உங்கள் சீருடைகளை 'மில்க்வைற்' சலவைத்தூள் கொண்டு துவைக்கும்போது மின்னலடிக்கும் அதிவெண்மையை பலமடங்கு அது தருகின்றது. வேறொரு சலவைத்தூள்தராத வெண்மையை 'மில்க்வைற்' தருகின்றது.

*'மில்க்வைற்' வெற்றுப் பக்கட்டுகளை சேகரித்து அனுப்பி அறிவு நூல்களையும் நீதி நூல்களையும் அன்பளிப்பாகப் பெறுங்கள்.*




'மில்க்வைற்' சலவைத் தூளின் விலை விபரம்

| | |
|---|---|
| 50 கிராம் பக்கட் | 5 ரூபா |
| 300 கிராம் போத்தல் | 30 ரூபா |
| 450 கிராம் பக்கட் | 40 ரூபா |

உங்களுக்கு உதவிட எங்களுக்கு உதவுங்கள்
உள்ளூர் உற்பத்திக்கு அள்ளித்தருவீர் ஆதரவை.

*மின்னலடிக்கும் அதிவெண்மைக்கு*
*'மில்க்வைற்' சலவைத்தூள்.*

**'மில்க்வைற்'**
**யாழ்ப்பாணம்.**

விளம்பர வடிவமைப்பு
செனித் ஜோ. எக்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியம் ⇄ இலக்கியம்



இந்த ஓவியத்தைப் பார்த்தவுடன்
மனதில் தோன்றும்
உணர்வினை
கவித்துவ வரிகளாக
எமக்கு எழுதி
அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org